ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5.
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 12—5—46 | இதழ் 4

★ ஜெபமாலை ★

"எங்கே என் ஜெபமாலை? ஐயோ! ஜெபமாலையின்றி நான் ஒருகணமும் உயிர்தரியேனே. என் உயிருக்கு உயிர்ஜெபமாலையல்லவா? என் வாழ்வுக்கு வழிகாட்டி, இருதயத்துக்கு இன்பம், துயர் நீக்கும் துணை, கதியளிக்கும் காவல், ஜெபமாலையாயிற்றே. ஜெபமாலையின்றி நான் எப்படி இருக்கமுடியும்?

என் எதிரே, முத்து, ரத்னம், தங்கம், பட்டு, எல்லாம் இருந்தும் என்மனம், ஜெபமாலையையே நாடுகிறது. ஜெபமாலை என்னை ஆட்கொண்டபிறகு, வேறு எதற்கும் நான் அடிபணிய மாட்டேன். ஜெபமாலை வேண்டும்! இப்போதும், எப்போதும்! என்னுடனேயே இருந்தாகவேண்டும். கொண்டுவா ஜெபமாலையை."

ஜெபமாலை, ஒளிந்திருந்த இடத்திலிருந்தே 'களுக்' கெனச் சிரித்தாள். எவ்வளவுபசப்புகிறான், என்னென்ன புரட்டுப் பேசுகிறான்; உண்மையா அவனுடைய உரை? இல்லை! உள்ளத்திலிருந்தா வந்தன, கிடையாது, உதட்டளவுதான். ஏன் ஜெபமாலை ஜெபமாலைஎன்று உருகுபவன் போல நடிக்கிறான்? இலாபமிருப்பதால்!

ஜெபமாலை, கோபுரநாதன்மகள், ஊரெங்கும் கோபுரநாதனுக்கு மதிப்பு. ஜெபமாலையைமணந்ததால், அந்தக் குடும்பச் செல்வாக்கு, ஆண்டிக்குக் கிடைத்தது. ஆண்டி, வேலை வெட்டி செய்யாமல், பரிமளமாக வாழ்ந்ததே, ஜெபமாலையின் தயவினால்தான். ஜெபமாலையுடன் ஆண்டி வாழ்ந்ததால்தான், ஆண்டிக்கு, ஊரிலே, செல்வம், செல்வாக்கு, எல்லாம். கண்ணியமும் காணிக்கையும் கிடைக்கும்படி செய்ததாலேயே ஜெபமாலையிடம், ஆண்டி, தனக்கு அமோகமான காதல் இருப்பதாகக் கூறினான். ஆண்டியின் மனதுக்குச் சந்தோஷமூட்டுவது, ஜெபமாலையின் 'சிபாரிசு' பெறஉதவும்; அந்தச்சிபார்சு, கோபுரநாதனின் உதவியைத்தமக்கு வாங்கித்தரும். ஊரார் ஆண்டியை ஆதரித்ததன் மர்மம் அதுவே. ஆண்டிக்குத் தெரியும் ஜெபமாலையின் அருமைபெருமை. ஜெபமாலைக்கும் ஆண்டியின் 'அன்பு' வெறும் வேஷமே தவிர, உண்மையல்ல, ஜெபமாலையின் தயவால் செல்வாக்குப்பெற்றதும், ஆண்டியின்மனம், தங்கத்திடம்தாவும், முத்து, ரத்னம், பட்டு என்று கண்ட கண்டபடி இருக்கும் ஆண்டி தேடும் காதல். ஜெபமாலை இதை அறிந்தே நகைத்தாள். ஊராரோ, ஆண்டிக்கு ஜெபமாலையிடம் உள்ள அன்பே அன்பு, தங்கம், முத்து, ரத்னம், பட்டு, எங்கும் மனதை அலையவிடவில்லை பார், எவ்வளவு உறுதி, உள்ளன்பு என்று புகழ்ந்தனர். பைத்யக்காரர்கள்! ஜெபமாலையைப் பெற்றுவிட்டால், பிறகு ரத்னமும் முத்தும், பட்டும் தங்கமும், ஆண்டியின் அடிதொழ வருகிறார்கள் என்ற தைரியமல்லவா அவனுக்கு. "உங்கள் எதிரே, சொல்கிறான், ஜெபமாலையே உயிர் என்று, நீங்கள் போய்விட்டதும், என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான், தங்கத்தின் தளுக்கு, முத்துவின் மோகனப்பார்வை, பட்டுவின்பளபளப்பு இவைகளிலே சொக்கி விடுவான், நான் கிடப்பேன் ஒரு மூலையில், கவனிப்பாரற்று. இதை அறியாமல், என்னையே அவன், உள்ளன்போடு நேசிக்கிறான் என்று எண்ணி ஏமாறுகிறீர்களே!" என்று ஜெபமாலை நீண்ணிச் சிரித்தாள்.

ஆண்டி, உள்ளே சென்றான் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு,

"ஜெபமாலை! வா! ஏன் தயக்கம்?"

"இப்படிப் பசப்பிக்கொண்டே இருப்பானேன்?"

"பழகிவிட்டேன் அப்படி! என்ன செய்வது?"

"இந்த "மோசடி"க்கு நான் உடந்தையாக இருந்தால்கூட இன்னும் நெடுநாளைக்கு உன் காலம் இப்போது உள்ளதுபோலவே இருக்குமென்று நினைக்காதே"

"ஜெபமாலை! ஏன், உனக்கேஉன் சக்தியிலே, சந்தேகம்? வேண்டாம். நீ இருக்குமட்டும் எனக்கு ஒரு குறையுமில்லை"

"அதுதான் தவறு என்றுசொல்கிறேன். காலம்இப்படியேஇராது. ஜெபமாலையிடம் காட்டும் அன்பு வெறும் வேஷம். உண்மையான அன்பு, தங்கத்திடம்என்று, ஊரார் தெரிந்துகொள்வார்கள். இப்போதே அந்தத்தெளிவு ஏற்பட்டுக் கொண்டுதான் வருகிறது!'

"ஜெபமாலை! நீயா இப்படிப்பேசுகிறாய்? நீ யாருடைய மகள்? எப்படிப்பட்ட குடும்பம்?"

"கோபுரநாதருக்கே கூடத்தான் இப்போது, குறைந்து வருகிறது செல்வாக்கு"

"ஏன்?"

"ஏன்! ஜெபமாலை, போன்ற மகளை, உன்போன்றவர்களுக்குத் தந்துவிட, அந்தச்சம்பந்தத்தைத் துணையாக வைத்துக்கொண்டு நீ, ஊரை ஏமாற்றுவதால்தான்"

"நான் என்ன ஏமாற்றினேன், ஜெபமாலை"

"விரிவாகக்கூறவா? வயிறு எரிகிறது. ஊராரின் உபத்திரவம் அத்தனையையும், கோபுரநாதரிடம் எடுத்துக்கூறித்தீர்த்துவிடுவதாகக் கூறுகிறாயல்லவா?"

"ஆமாம்"

"ஊரார், ஏன் நம்புகிறார்கள்? உன் திறமையை மதித்தா?"

"இல்லை! என்னுடன் நீ இருப்பதால்"

"ஊராரின்தொல்லைதீருகிறதோ?"

"இல்லையென்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது"

"நீ, உண்மையிலே கோபுரநாதரிடம் முறையிட்டுக்கொள்வது, மக்களின் கஷ்டத்தைப் போக்குங்கள் என்றா?"

"போ, ஜெபமாலை! என்மானத்தையே, வாங்குகிறாய்"

"நான் அறிந்துகொண்ட இந்த உண்மைகளை, ஊரார் தெரிந்துகொண்டால் பிறகு தெரியும் உன் செல்வாக்கு"

"பயம் காட்டாதே, ஜெபமாலை!"

"பயம் காட்டவில்லை; நானே பயப்படுகிறேன். நீயும் கூடச் சேர்ந்துதானே எங்களை ஏய்த்தாய் என்று ஊரார் கோபித்து என்னையும் துன்புறுத்துவார்கள் என்று எண்ணிப்பயப்படுகிறேன்"

'போதும் உன்னுடைய வாதம்! வா! ஜெபமாலை! உன்னைப் பெற்றபிறகு நான் இழுக்கத்துனியும் சம்மதியேன். உன்னைவிடமாட்டேன். முடியாது. நீஇல்லாவிட்டால், என் கதி என்ன ஆகும்? எனக்கு இப்போதுள்ள உயர்நிலை இருக்குமா பிறகு. ஜெபமாலை! ஜெபமாலை! வா, வா! என்னோடு இரு! கைவிடாதே! ஜெபமாலை, வா, வா!"

★

"ஏ! புதுமடத்தாண்டி, என்ன இது, குளறிக்கொட்டறே! ஜெபமாலை, ஜெபமாலைன்னு கூச்சலிட்டு எங்க தூக்கத்தையும் பாழ்செய்யறே. என்னஇழவு கனவுகண்டு கூவினே"

பக்கத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தபண்டாரங்கள் புதுமடத்தாண்டி, தூக்கக்கலக்கத்திலே ஜெபமாலை, ஜெபமாலைஎன்று உளறியதுகேட்டுத், தட்டிஎழுப்பி, என்னவிஷயம் என்றுகேட்டனர்.

திடுக்கிட்டு எழுந்த புதுமடத்தாண்டி, முதலிலே தன்திருஓட்டைத்தேடினான், அதிலேதன் ஜெபமாலை இருக்கக்கண்டு, "அப்பா! இருக்கு!" என்றான். பிறகுசொன்னான், கனவிலே ஜெபமாலை ஒரு பெண்ணுருத்தோன்றித் தன்னிடம் வாதபுரிந்ததையும், வம்புக்குநின்றதையும். அதுதான் மேலே இருப்பது.

புதுமடத்தாண்டியை மற்றவர் கேலிசெய்தனர், பித்தமாடனக்கு, என்று. அவன்மட்டும், கோபத்தோடேயே "கண்டதனைவுதான்,

அடுத்த பக்கம் பார்க்க

பெரியார், ஆச்சாரியார் சந்திப்பு.

—●—

5—5—46-ல் தியாகராய நகர் திராவிடர் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற, கருப்புச் சட்டைப்படை ஊர்வலத்தின் போது, ஆச்சாரியார், வீட்டிலிருந்தவர் வெளியே வந்து நின்று பெரியாரைக் கண்டார்; இருவரும் வணக்கம் கூறிக்கொண்டு அளவளாவினர்.

"ஏன் வரவேண்டும்? நயவஞ்சகராகிய தங்களிடம்"

"நமக்குள் இருக்கும் தகராறு பிறகு பார்த்துக்கொள்வோம், நாலுபேர் எதிரே, என்னை அவமானப்படுத்திவிடாதே. வா"

"முடியாது. உன் மோசடிக்கு நான் எத்தனை காலம் உடந்தையாக இருப்பது. நீ ஊரை ஏய்க்கிறாய், என்மீது அமோகமான அன்பு இருப்பதாகக்கூறி. அவர்களும் நம்பி, உன் அடிபணிகிறார்கள். இந்த நயவஞ்சக நாடகத்துக்குத் தானே நான் பயன்படுகிறேன். என்னிடமா உனக்குஉண்மையிலே அன்பு? ஊரை நீ ஏய்க்கலாம், என்னை ஏமாற்ற முடியுமா?"

"ஜெபமாலை! உன்னால் நான் உயர்வு அடைந்தேன், உன்னை நம்பித்தான்வாழுகிறேன். உன் அருள் இல்லாவிட்டால், நான் ஊராரால் ஒருகாசுக்கும் மதிக்கப்படத்தான் மாட்டேன். உத்தமகுண ஜெபமாலை! என்னை இந்தச் சமயம், கைவிடலாமா?"

★ ரங்கோன் ராதா! ★

சௌமியன்.

"குடி வெறியால் கூத்தாடியவன், என்னிடம் என்னசெய்வது! கீழே விழ்ந்தான், உடனே எழுந்திருந்தால், மேலும் அடிவிழும் என்ற பயம், அவனுக்கு. எனக்கு அவன்நிலையைக்கண்டுசிரிப்புக்கூட வந்தது. எவ்வளவு ஆர்ப்பரித்தான், அடிவிழுகிற வரையில். அடிகொடுத்ததும் எவ்வளவு அடக்கம்!"

"இதுதான் உங்களூர்வேலேயோ? ஏன், சார்! என் சம்சாரத்துடன் நான் ஏதோ சண்டைபோட்டா, வீடுபுகுந்து அடிக்கச் சொல்லித்தான் இந்த ஊர்ச் சட்டம் சொல்லுதோ"—என்றுகேட்டான், அழுகுரலில். அதைக்கண்டு நான் திடுக்கிடவில்லை; ராதாவைப் பார்த்ததும் திகைத்துப்போனேன். ராதா, என்னைப் பார்த்த பார்வை, 'சீ! நீயும் ஒரு முரட்டுப்பயல்தான். அவன், அம்மாவை அடித்துத் துன்புறுத்தினன், நீ, குடித்துவிட்டு நிலைகுலைந்திருப்பவனைத் துன்புறுத்துகிருய்." என்று கூறுவது போலிருந்தது. கொஞ்சம் வெட்கமடைந்து, "என்னை மன்னிக்கவேண்டும்" என்று கூறினேன், ராதாவை நோக்கி. நான், அவனிடம் பேசுவதாக எண்ணிக்கொண்டகுடியன், இடியட்! உன்னையா? பார், நான் என்ன செய்கிறேன்என்று. பர்மாவிலிருந்து வந்திருக்கும் என்னைக் கொள்ளையடிக்கவும், என் பெண்ணைக் கைபிடித்து இழுக்கவும் நீ துராக்கிரதமாக வீட்டுக்குள் நுழைந்து கலகம் செய்ததாகப் போலீசில் பிராதுகொடுக்கிறேன். என்ன நடக்கிறது பார்" என்று மிரட்டினன்.

ராதா, "அப்பா! போதும் உங்கள் பிரதாபம், போய்ப்படுங்கள்" என்று கொஞ்சம் கண்டிப்பாகச் சொன்னுள். இதற்குள், ரங்கம்மாள், "அப்பா! நீ யார் பெத்தமகனே, என்னைக் காப்பாற்றினய். இந்தப் பாவி குடிவெறி ஏறிப்போனுல், இப்படித்தான் அடித்துத் துன்புறுத்துவான்." என்று என்னிடம்கூறிவிட்டு, ராதாவுக்கு ஜாடைகாட்ட, ராதா, பர்மாக்காரனை அழைத்துக் கொண்டுபோய்விட்டாள், உள்ளே படுக்கவைக்க.

"அம்மா! நான் அவரை அடிக்க வேண்டும் என்று எண்ணி இங்கு வரவில்லை. என்னமோ அலறல் சத்தம் கேட்கவே இங்குவந்தேன். நான்சமாதானம்சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவர் என் மீது பாய்ந்தார். அதனுல்தான்..........." என்று நான் சமாதானம் கூறினேன்.

"நல்ல பிள்ளையாண்டானப்பா நீ. பக்கத்துவீடா, நீ இருப்பது"

"ஆமாம்"

"என்ன வகுப்பு?"

"முதலியார் வகுப்பு"

ரங்கம்மாள், பெரு மூச்செறிந்துவிட்டுச், சிலவிநாடி மௌனமாக இருந்தது கண்டு, நானுக என் வரலாற்றைக் கூறலானேன். என் தகப்பனுரின் பெயரைக் கூறினது தான்தாமதம், ரங்கம்மாள், என்னை விறைக்க விறைக்கப் பார்த்து,

"யாருடைய மகன்?" யார் மகன் நீ" என்று கேட்டு, என்னைப் பயப்படுத்தியே விட்டார்கள். "ஏன்? ஏன், பதைக்கிறீர்கள், என் தகப்பனுர் பெயர் தர்மலிங்க முதலியார்" என்று நான் கூறினேன். "கோட்டையூர்?" என்று கேட்டார்கள், "ஆமாம்" என்றேன். உடனேரங்கம்மாள், "அட! மகனே!!" என்று ஒரு பெரிய கூச்சலிட்டு என் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

"மகனே! என் கண்ணே! உன்னையா, நான் காண்கிறேன்? கோட்டையூரார் மகனு" என்று கேட்டுக்கொண்டே, என் இடது காதுக்கு அடிப்புறத்தைக்கூர்ந்து பார்த்துவிட்டு, மீண்டும் "என் மகனேதான்!" என்று ஆவேசம் வந்ததுபோல அலறினுர்கள். கண்களிலே இருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது.

"அம்மா, இது என்ன!"

"அம்மா! கண்ணு! நீ என்னை அம்மாவென்று அழைக்கவும் நான் கேட்கவும் கொடுத்துவைத்தவளானேனே"

"யார் தாங்கள்?"

"நானு? என்ன விபரீதமான கேள்வியடா கண்ணே! ஆனுல், உன்மேலே என்ன தப்பு? எல்லாம் இந்தப் பாவியால் ஏற்பட்டது தானே"

"எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. நான் கோட்டையூர் தர்மலிங்க முதலியார் மகன், தாங்களோ, பர்மா..............."

"பர்மாவிலிருந்து வந்திருக்கும் பராரி! ஆனுல், அப்பா, நான்தான் உன் தாய்"

அதற்குமேல் ரங்கம்மாளால் ஏதும் பேசமுடியவில்லை. மயக்கமுற்றுக் கீழே சாய்ந்துவிட்டார்கள்.

கூச்சலைக்கேட்டு ஓடிவந்தராதா, முகத்தில் தண்ணீர் தெளித்து ரங்கம்மாவைத் தெளியவைத்தாள். கண்களைத் திறந்து, மறுபடியும் என்னை வாஞ்சனையோடு பார்த்துவிட்டு, "அப்பா! சுகமாக இரு! தங்கம் சௌக்கியமா? உன் அப்பா எங்கே?" என்று கேட்டார்கள்.

"இதென்னம்மா பெரிய விந்தையாக இருக்கிறது. என் தாயார் இறந்து இருபது வருஷமாகிறது..............................."

"ஆமாம், நீ அப்போது ஒருவயசுக்குழந்தை.............................."

"அப்படியானுல் தாங்கள்......."

"செத்தவள்பிழைத்துவந்துஇருக்கிறேன், சீர்கேட்டுப் பேர்கெட்டு, சிரமப்பட்டு, ஊர்விட்டு ஊர் ஓடி, உன்முகத்தில் விழிக்கவும் இலாயக்கற்று."

ராதா, என்னைப்போலவே திடுக்கிட்டுநின்ருள்.

ரங்கம்மாள், ராதாவை அருகே அழைத்து, என்னைக்காட்டி, "ராதா, உன் அண்ணன்; என்மூத்தமகன்" என்ருர்கள். பிறகு என்னைப் பார்த்து, "மகனே! மனதிலேஇருக்கும் பாரத்தைக்குறைத்துக் கொள்ளாவிட்டால், பிராண வேதனையாக இருக்கும், ஆகையால் சொல்கிறேன்; என்னை நம்பு, நான்தான் உன்தாய். ஊரும் உலகும் நீ ஒரு வருஷக்குழந்தையாக இருக்கும் போது, நான் இறந்துவிட்டதாகவே சொல்லும். உன் அப்பாவும், சித்தியும் அதேதான் சொல்வார்கள். ஆனுல் உண்மை, வேறு. நான்சாகவில்லை, ஓடிவிட்டேன், உன் தகப்பனைவிட்டு" என்று கூறினுர்கள்.

நான் என்ன நினைப்பது? செத்துப்போனதாகக் கூறப்பட்ட என்தாய் உயிருடன் என் எதிரே உட்கார்ந்திருப்பதுகண்டு, ஆச்சரியமடைவதா? ஆனுல், பர்மாவிலிருந்து, ராமசாமிநாயுடு என்பவனுடனல்லவா—வந்திருக்கிருர்கள். விபசாரி! என்தாய், இந்தக்கதியில்—என்எதிரில் — இருபது வருஷங்களுக்குப் பிறகு, எனக்கு இப்படி ஒருதாய் இருக்கும் விஷயம்தெரிய வேண்டுமா? என்னுல் ஒன்றுமே புரிந்துகொள்ளமுடியவில்லை. "அம்மா!" என்றுவார்த்தை இருதயத்திலிருந்து கிளம்பி, தொண்டைக்குழிவரை வரும், உடனே ஒரு திகைப்பு, சத்தம் ஒடுங்கிவிடும்! நான் அந்தச்சமயம்பட்ட 'இம்சை'யின் தன்மையை விவரிக்கவேமுடியாது. கண்கள்நீரைப்பொழிந்தன, உடம்பு, காற்றில் கொடியென ஆடிற்று, இடையே ராதா, "அண்ணுவா? ஏனம்மா, முன்பு சொன்னயே, ரங்கோனில், அந்த அண்ணனு?" என்று வேறு கேட்டாள் ரங்கம்மாவைப்பார்த்து. "ஆமாம், கண்ணே! என் செல்வக்குழந்தை 'தான்" என்று கூறிவிட்டு, என்னைப் பார்த்து,

"மகனே! உன்னை பார்க்கும் போது நான் பூரிப்பு அடைவது போல, நீ அடைய முடியாது. நீ எதிர்பாராத சம்பவம் இது. செத்துச்சாம்பலாகிவிட்டாள் தாய் என்று நம்பிக்கொண்டிருக்கும் உனக்கு என்னைக் கண்டதும், உண்மையில், கனவா, நனவா, நிஜமா, கட்டுக்கதையா என்று கூடத் தோன்றும். ஆனுல் நீ நம்பினுலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, உன்னைப்பார்த்தேனே அது போதும் எனக்கு, ஒருவருஷக்குழந்தையாக இருக்கும்போது, ஓர்இரவுநீஎன்னை ஒட்டிக்கொண்டதுபோலப் படுத்திருந்த சமயம், பாவிநான், உன்னை விட்டுப்பிரிந்தவள். கெட்டுஅலைந்து இந்தக்கதியானேன். குடும்பகௌரவத்தைநாசமாக்கினேன். மகனே! நான் செத்துவிட்டதாகவே நீநம்பிவிடுவது நல்லது. நான் உயிருடன் இருப்பது உலகுக்குத் தெரிவது கூட, நல்லதல்ல, மகனுக்குத்தலையிறக்கத்தைத் தரும் மகாபாவி நான்" என்றுகூறி விம்மினுர்கள். இப்படியும் இருக்கமுடியுமா? என் தகப்பனுர், திட்டமாகச் சொன்னுரே, இறந்துவிட்டாள் உன்தாய் என்று. எப்படி இந்தக்கதை உண்மையாக இருக்க முடியும்; என்ற கேள்விகள் என்மனதிலேதோன்றி என்னைத்துடி துடிக்கச் செய்தன முதலில். ஆனுல் ரங்கம்மாள் என் தாய்தான், உண்மை, என்று அந்தக்குரலிலே இழைந்துவந்த பாசமும், உருக்கமும், எனக்குக்காட்டிவிட்டது. நம்பமுடியாததுபோலக் காணப்படும் பல உண்மைகள் உலகில் உண்டு. அதில் இது ஒன்று என்று தீர்மானித்தேன். என்தாயிடம்தான் நான் பேசுகிறேன் என்று, என் உள்ளம் உரைத்தது. கோபத்துக்குப் பதில், கண்ணீர் கொப்பளித்ததற்குக்காரணம்வேறு என்னவாக இருக்கமுடியும். "அம்மா! அம்மா! என்தாயார்! நீங்கள்? ராதா என் தங்கை!" என்று நான் மெல்லக்கூறினேன், என்காதிலே அந்தச்சொற்கள் விழுந்தபோது, எனக்கே சற்றுத்தூக்கி வாரிப் போட்டது. என் கஷ்டமான நிலைமையைத் தெரிந்துகொண்ட என் தாயார்,

"அப்பா! நான், என்மகனைக்கண்டேனேதவிர, நீ உன் தாயாரைப் பார்க்கவில்லை — இன்று நடப்பது அவ்வளவும் ஏதோ ஒரு கனவிலே நடந்தது என்று எண்ணிக்கொள். உன் வாழ்க்கைக்கு நான் சனியனுக மாட்டேன். கோட்டையூரார் குடும்பத்தின் பெருமையை நான் குலைக்கமாட்டேன். பயப்படாதே, நான்தான் உன் தாயார் என்பதை உலகம் அறியும்படி நான் செய்யமாட்டேன். நாளைக்கே, நாங்கள் இங்கிருந்து கிளம்பி, எங்காவது நெடுந்தூரம் சென்றுவிடுகிரேம். உனக்கு அவமானம் வருவதை நான் சகிக்கமாட்டேனடா கண்ணே! என் புத்திக்குறைவினுலும், உன் அப்பாவின் கிராதகத்தாலும், நான் இக்கதியானேன். நான்செத்துவிட்டேன்என்றுஊரார் நம்புவதால், இப்போது, உன்மீது மாசுமருவு இல்லை. உண்மையாக, நான் உயிருடன் இருக்கிறேன்,

(7-ம் பக்கம் பார்க்க)

●

ஜெபமாலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஆனுல் ஜெபமாலை பேசமுடியுமானுல், என்னைமட்டுமா, உங்களையெல்லாம்கூடத்தான், அதேகேள்விகளைக்கேட்டுத் திணறவைக்கும் என்று சொன்னுன். மேலும்சற்று உரத்த குரலிலேசிரித்தனர்பண்டாரங்கள். "டே! புதுமடத்தாண்டி! திருவாவடுதுறை, தருமபுரி, சிருங்கேரி, முதலிய இடங்களிலே கேள்வி — கேட்கத் துணிவில்லாத ஜெபமாலை, போயும் போயும், போக்கிடமற்றநம்மிடமா கேள்விகேட்கும். அங்கே அல்லவா, உன்கனவிலே நடந்தகாட்சிநடக்க வேண்டும்" என்றனர்.

"அதுசரி ஆமாம்!" என்றுகூறிவிட்டுப் படுத்தான் புதுமடத் தாண்டி. ஒருபுதியபயம் அவனைப் பிடித்துக்கொண்டது. ஜெபமாலை ஒருநாளும் பேசப் போவதில்லை, ஆனுல், ஜனங்களே அதுபோலப் பேசஆரம்பித்தால், கேள்விகேட்கத்தொடங்கினுல், ஆபத்தாகமுடியுமே, என்றுநினைத்தான். பயம் கொஞ்சநேரம்தான்இருந்தது. பிறகு அவனும் மற்றவர்கள் போலவே, ஆனுல்மனதிற்குள் சொல்லிக் கொண்டான், "அந்தப் பெரிய இடங்களைக்" கேள்விகேட்டு, என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைச்செய்துவிட்டுப் பிறகு தானே நம்மைப்போன்றவர்களைக் கேட்க வருவார்கள், பார்த்துக் கொள்வோம் அப்போது" என்று, தூங்கினுன் நிம்மதியாக.



உறையூர்

எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்கவஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

[இது, சீமான் உலகில் காணக்கூடிய ஒரு சிறு சித்திரம்.

படக்காட்சியாக வெளிவந்ததல்ல, காமிராவுக்குத் தப்பிய காட்சிகளிலே இது ஒன்று.

நம்நாட்டுக் காமிராக்கள்தான் இன்னமும் கைலாய, வைகுந்தக் காட்சிகளைப் படம் பிடிக்கும் சத்காரியத்திலேயே ஈடுபட்டுள்ளனவே! சமூகத்தைப் படம் பிடிக்க நேரம் ஏது?

காமிராவுக்கு இவை தப்பிவிட்டன, ஆனால் கருத்துள்ளவர்கள் இவைகளைக் காணமுடியும்.

எங்கு? குறிப்பிட்டு ஒரு இடத்தைச் சொல்ல முடியுமா? காட்சி, சீமான்கள் உலகில் காணக்கூடியது என்று மட்டுந்தான் சொல்லமுடியும்.]

●

காமிராவுக்குத் தப்பிய காட்சிகள்:

செல்லப்பிள்ளை!

—●—

இடம்: சீமான் வீடு முன்புறம்.

உறுப்பினர்: சீமான்
அவன் நண்பன்

(பிறகு) வேலைக்காரக் குப்பன்.

காலம்: மாலை.

நிலைமை: [சீமான், வெளியே புறப்படச் சித்தமாகி, அதற்கேற்ற அலங்காரத்துடன் விளங்குகிறார். மோட்டார், 'ரிப்பேர்' செய்யப்படுவதாகச் சொல்லிவிட்டான் டிரைவர் மோகன். எனவே, 'பீட்டன்' தயாராக இருக்கிறது சீமான் செல்ல.

வெளியூரிலிருந்து வந்திருக்கும் நண்பன், சீமானுக்குப் பள்ளிப் பருவ சினேகிதம். நிம்மதியாக இருந்துபடித்து ஒரு புத்தகம் எழுத, சீமான் வீட்டுக்கு வந்திருக்கிறார்.

சீமான், தன் நண்பனை நன்கு உபசரித்து வருகிறான்.

மாளிகை வாயற்படியை நோக்கி இருவரும் நடந்து வருகின்றனர். அப்போது சீமான் உல்லாசமாக, நண்பனுடன் பேசுகிறார். தன்னை உபசரிக்கும் சீமானின் உள்ளம் குளிரப்பேசுவது தன் கடமை என்ற எண்ணம் நண்பனுக்கு.

நண்பன் எதிரே, தன் செல்வம் அந்தஸ்து, அதிகாரம், ஆகியவைகளைக் காட்டிக்கொள்வதிலே, சீமானுக்கு ஒரு அலாதியான சந்தோஷம்.

இந்நிலையில், பேச்சு ஆரம்பமாகிறது இருவருக்கும்.]

சீமான்: (தன் நண்பனிடம்; எதிரேவரும் தன் ஆளைக் காட்டி.)

பயலைப் பார்த்தீரா? எப்படி இருக்கிறான்?

நண்: கரிக்கட்டைபோல.........

சீ: நிறம்கிடக்கட்டுமய்யா! நான் கூடத்தான் கருப்பு.

நண்: (அசட்டுச் சிரிப்புடன்) மறந்துவிட்டேன்; மன்னிக்கணும், ஆனா, ஒங்க நிறம் கருப்பு என்றாலும், பளபளப்பு பாருங்கோ, அவன் அப்படி அல்ல...............

சீ: அது கிடக்கட்டுமய்யா. இந்தப்பய, இருக்கிற இருப்புக்கு இவன் இப்ப கலியாணம் வேறு செய்துகொண்டான்.

நண்: என்ன அவசரமாம்

சீ: வயசு, ஆச்சு, கிடாபோல. ஆனா இதுகளெல்லாம், காலைமுதல் மாலைவரை வேலை செய்து கிடக்கணும், பணம் காசு கிடையாது, என்னமோ கலியாணம் கலியாணம் என்று துடித்துக்கொண்டுபோய், கலியாணத்தை நடத்திக்கொண்டான்.

ந: ஆமாம், கலியாணமென்றால் ஒரு பெரிய பொறுப்பாச்சே, நமக்கு முடியுமா இப்போது, என்கிற கவலையே, முன்யோசனையே கிடையாது.

(வேலையாள் வந்து கும்பிடுகிறான்)

சீ: ஏண்டா, குப்பா! கலியாணம் செய்துகிட்டாச்சி! சந்தோஷந்தானே?

வே: (கூச்சத்துடன்)
ஆமாங்க, எஜமான்...............

சீ: ஏலே, டேய்! காதிலே என்னடா.

(நண்பனிடம்) பீடித்துண்டு.

(வேலையாள் அதை எடுத்து அவசரமாக மறைக்கிறான்)

(சீமான் வேலையாளை நோக்கி)

ஏண்டா, உன் மூஞ்சிக்கும், யோக்யதைக்கும் கலியாணம் வேறே செய்துகிட்டே. கால்காசுக்கு மதிப்பாளாடா உன்னை, உன் சம்சாரம்?

(வேலையாள் இளிக்கிறான்)

சீ: என்னடா, பல்லைக்காட்டறே?

(நண்பனைப்பார்த்து) பெண், நல்ல இலட்சணமா இருக்கா சார், கொஞ்சம் சிகப்புக்கூட. (வேலையாளைப்பார்த்து) ஏண்டா, உன் சம்சாரம் சிகப்புத்தானே?

வே: மாநிறமா, இருப்பா.

சீ: போடா போ, நல்லசிகப்புத்தான். நல்ல தேய்ப்பும் மேய்ப்பும் இருந்தா, நல்லாத்தான் இருப்பா. அதுபாவம், இவனிடம் வந்துசேர்ந்தது.

ந: ஏழையா இருக்கும்...........

சீ: இவன் என்ன மகாராஜனோ! அதெல்லாம் இல்லே, ஆசாமி, எப்படியோ, கொண்டுவந்துவிட்டான் சரியான குட்டியாப்பார்த்து.

வே: எங்க அத்தைமகதானுங்களே, அவ.

சீ: அத்தை மகளோ, மாமன் மகளோ, நல்ல பெண். (நண்பனைப் பார்த்து) நல்ல சினிமா டைரக்டர் கையிலே அகப்பட்டா, ஸ்டார் ஆயிடுவா சார்.

ந: கிராமப் பெண்களே...........

சீ: ஒரு தனி அழகுதான்........... இவன் எப்படி அவளை வைச்சிக் குப்பை கொட்டப் போறானோ தெரியவில்லை.

ந: டேய் குப்பா, ஐயா, ரொம்பப் புகழ்கிறாரே, உன் சம்சாரத்தைப் பத்தி.

வே: ஆமாங்க;

சீ: ஏண்டா, உன்னிடம் ஆசையா இருக்காளா?

வே: (வெட்கத்துடன்) ஆமாங்க ....சிறுசுதானுங்களே, புதிசு பாருங்கோ...............

சீ: சரி: சரி, ஜாக்ரதையாகவைச்சிக் காப்பாத்து தெரியுதா. டேய்! அருமையான பெண்ணுடா அது. உனக்குக்கிடைக்கிறவஸ்து இல்லா. தெரியுதா?

வே: சரிதானுங்க...............

சீ: சும்மா, நாம்பத்தான் தாலியைக் கட்டிப்போட்டோமென்று இருந்துவிடாதே, தெரியுதா, (நண்பனைப்பார்த்து) எனக்குச் சந்தேகம்தான் சார், அந்தக் குட்டி, இந்தப்பயகூடக் காலந்தள்ளுவாளான்னு சந்தேகந்தான், ஏன்னா, இவன் இருக்கிற இலட்சணத்துக்கு இவன் துளிகூட அவளுக்கு ஏத்தவனல்ல. நீங்க வேணுமானா ஒரு நாளைக்கு பாருங்க, அவ, ஒருநீலக் கலர் சேலையைக் கட்டிக்கொண்டு கொண்டைபோட்டுகிட்டு, குடத்திலே தண்ணி எடுத்துக்கிட்டுப் போகிறபோது பார்த்தா, ...

வே: நான் போயிட்டு வரட்டுங்களா?

சீ: ஏண்டா, கோவமா? என்னடா இது நம்ப புதுப்பொண்டாட்டியைப்பத்தி பேசறுங்களேன்னு வருத்தமா?

வே: இல்லிங்க.........................

சீ: போ! போ!

(வேலையாள் போகிறான்)

சீ: (நண்பனிடம்)

பயலுக்குக்கொஞ்சம் கோபம். கிடக்கிறான். சார், உண்மையிலேயே இந்தப்பய அந்தப்பெண்ணுக்கு ஏற்றவனே அல்ல, ரொம்ப அழகு சார்; எப்படித்தான் இவனிடம் தக்குவாளோ தெரியலே. (கைக்கடியாரத்தைப் பார்த்து) ஓ! நேரமாயிடுத்து. வேளா, கோபித்துக்கொள்வாள். நான் வரட்டுமா?

நண்: செய்யுங்க.

சீ: நீங்கள் அந்தப்புத்தகத்தைக் கட்டிக்கொண்டு அழப்போகிறீர்களாக்கும்.

நண்: ஆமாம், இன்னும் ஒரு ஐம்பது பக்கம் இருக்கு.....................

சீ: என்ன புராணம்னு பேர் சொன்னீர் அதுக்கு?

நண்: புராணமல்ல; யோகவிளக்கம்.

(சீமான் விடைபெற்றுக்கொள்கிறார்)

[சீமான் போனபிறகு வேலையாள் வருகிறான். நண்பனைப் பார்த்து]

வே: யோக்யதையாய்யா இது.

ந: என்ன குப்பா? என்ன கோபம்?

வே: இல்லைய்யா, என்னமோ, வேலைசெய்து பிழைக்கிறோம், வயித்துக்காக. எங்கஅப்பன் ஜெமீன்தாரா, நான்குடித்துவிட்டு ஊர்சுற்றி விடுபோக. பாடுபட்டு உழைச்சி நான் குடும்பம் நடத்தறேன். ஏழைன்னா, எது வேணுமானாலும் பேசிடலாமா சொல்லுங்க?

ந: என்ன திட்டினார் இப்போ?

வே: திட்டவேணுமா? கழுதே நாயேன்னு ஆயிரம் தடவைத் திட்டிப்போட்டாக்கூடப் பரவாயில்லையேய்யா, அந்த ஆள், என்னத்தான் பணத்திமிரு இருந்தாலும், என்கிட்டவே, என் பொண்ஜாதியைப்பத்தி ஏதுவோ தெருவிலே சுத்தறபொம்பளையைப்பத்திப் பேசறதுபோலப் பேசறதும், உனக்கு ஏத்தவளில்லே, ஜாக்ரதையா காப்பாத்த வேணும், சினிமாக்காரிபோலஇருக்காஎன்று, எவ்வளவு தலைஇறக்கமான பேச்சு பேசினான் அந்த மனுஷன். சோத்துக்காக, உழைக்கறதுக்கு இந்த உடலை ஒப்புவிச்சேன், மானத்தைக்கூடவாய்யா? ஒருபுருஷன் கிட்ட அவன் பொண்ஜாதியைப் பத்தி இப்படியாய்யாபேசச்சொல்லுது. என்னத்தான் பணம் இருந்தாலும்...............................

ந: கோபிக்காதே குப்பா! அடடே, என்னடா, இது அழறே. சும்மா தமாஷ் செய்தாரு...........

வே: இதுதான் தமாஷாய்யா? தமாஷா! ஏழையைக் கூட்பிட்டு வைச்சிக்கிட்டு அவன் பொண்சாதியைப்பத்தி அவன் எதிர்லேயே, கேவலமாப்பேசிக்கேலிசெய்யறது தமாஷா? என்னென்னமோ, பெரிய பெரிய புஸ்தகமெல்லாம் படிக்கிறயே நீ, அதிலே இதெல்லாம் தமாஷ்னு தானெழுதி இருக்கா?

ந: நீ, இவ்வளவு வருத்தப்படுவேன்னு, நான் எண்ணலை...........

வே: நீ, எப்படி எண்ணுவே? நீதான், அவன்கூடச் சேர்ந்துகிட்டு, அசப்பட்டவரைக்கும் ஆனுபவிக்கறேயே, உனக்கு மாத்திரம் எப்படி ஏழைக வயிறு எரியறது தெரியப்போவுது? அவனுக்குஏத்தவளா நீ? உனக்குத்தக்குவளா அவ? என்று அவன் கேட்டான்; நீ, அவர் தமாஷ் பேசினாரு என்று சொல்கிறே. நியாயமாப்பேசு, இதுவாத் தமாஷு?

ந: விளையாட்டு விபரீதமாப் போச்சு...............................

வே: அடபார்ட்டா அறிவுகெட்டவனாஇருக்கறே, நீபடிச்சதுஎதுக்கு? அந்தப்பணமூட்டைக்குப் பக்க மேளம் அடிக்கிறதுக்கா? நியாய அந்யாயம் பார்த்துப் பேசறதே இல்லைன்று சத்தியம் செய்துகிட்டுத்தான் அந்தப்பெரிய புஸ்தகத்தைப்படிக்கறயா? என்னடா இது, ஒருமனுஷனை அவன் எதிரிலேயே அவமானப் படுத்தறுங்களேன்னு கொஞ்சங்கூட இரக்கம்வரலை........

ந: நான் என்னப்பா செய்வது? அவனுங்க சுபாவம் அது.

வே: ஏழைக மனசு பதறப் பதறப்பேசறது; அதுக்கு நீ தமாஷ்னு பேருவைக்கறது...................நல்லா இருக்கய்யா உங்க நியாயம்.

ந: கிடக்கிறான், விட்டுவிடு, பதறாதே.........................

வே: வேணுமானா வாய்யா, இப்பக்காட்டறேன், உன் கண்ணாலேயே பாரு.........................

ந: எதை?

(6-ம் பக்கம் பார்க்க)


ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமிலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2–2–0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

அடுத்த இதழ்

●

18, 19—5—46ல் கும்பகோணத்தில் நடைபெற இருக்கும் "சந்திரோதயம்" "சிவாஜி" ஆகிய இரு நாடகங்களுக்கும் "திராவிட நாடு" அச்சகத் தோழர்கள் அனைவரும் போகவேண்டியிருப்பதால், 19—5—46ல் 'திராவிட நாடு" வெளிவராது என்பதையும், 26—5—46 முதல் வழக்கம்போல் வெளிவரும் என்பதையும் வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

மானேஜர்

திராவிட நாடு

காஞ்சி] 12—5—46. [ஞாயிறு

காங்கிரஸ் இளைஞர்கட்கு!

★

ஐக்கியமாகாணத்திலே, போலீசாருக்கு, "மெஷின்கன்" போன்ற புது ஆயுதங்கள் தரப்பட்டு, பயிற்சி தரவும் ஏற்பாடாகி இருக்கிறதாம். தற்காப்பு, தாக்குதல், எனும் இரு துறைகளிலும் முன்பு இருந்ததைவிட அதிகமான திறமை பெறச் செய்யப்படுகிறதாம். பாபம்! பாட்டாளிகள் பெறுகிறதைவிடச் சில வகையில் குறைந்த அளவு சம்பளம் வந்தும் போலீசார்மீது, சர்க்காரின் கருணை, கனமான மெஷின்கன் தருமளவுக்கு, வந்திருக்கிறது! கேட்டது சம்பள உயர்வு! தரப்பட்டதோ மெஷின்கன்!!

ஏன் இந்தப் புதுமுறை? லண்டனிலே ஒரு ஆங்கிலேயர் சொன்னார், இப்போது மந்திரிகள் நடத்தும் பேச்சு பலன் தராவிட்டால், காங்கிரஸ் ஏதாவது கிளர்ச்சி செய்யக்கூடுமென்று கருதி, சர்க்கார் அத்தகைய கிளர்ச்சியைச் சமாளிக்க, போலீசுக்குப் புதுமுறைக்கு கொடுத்து, வேலை செய்யத் திட்டமிட்டு இருக்கிறார்கள் என்று.

உடனே இதனை, சம்பந்தப்பட்ட பல அதிகாரிகள் மறுத்தனர்.

ஆனால் ஒருவிஷயம், மறைக்கப்படவில்லை. மூன்று மந்திரிமார்கள் நடத்தும் மாநாடு, முறிந்துபோகுமானால், காங்கிரஸ் பலமானதோர் போராட்டம் நடத்தும் என்பதைக் காங்கிரஸ் தலைவர்கள் ஒளிக்காமல் கூறிவருகிறார்கள்—கொஞ்சம் உரத்தகுரலிலும், உக்கிரமாகவும் பேசுகிறார்கள். வம்பாக முடியப்போகிறது என்ற கவலையால், காந்தியார் அடிக்கடி அஹிம்சை உபதேசம் செய்து, காங்கிரஸ் கிளர்ச்சி செய்ய முற்பட்டால் அஹிம்சா முறையிலேதான் இருக்குமென்று கூறிவருகிறார். ஆனால், சுபாஷின் தோழர்களும், ஜெயப்பிரகாசரின் சகாக்களும், பேசும் "இறுதிப் போராட்டம்" — அஹிம்சையை அடிப்படையில் கொண்டதாகத் தெரியவில்லை. எப்படி இருந்தபோதிலும், சமரசப்பேச்சு முறிந்தால், கிளர்ச்சி ஏற்படும் என்பதுமட்டும், பலமாகக் காங்கிரசாராலும் கூறப்படுகிறது.

எனவேதான், போலீஸ் படையிலே புதுப் புதுமுறைகள் ஏற்படுவது கண்டு, காங்கிரஸ் தலைவர்கள், இதெல்லாம், காங்கிரசை ஒழிக்கச் சர்க்கார் ஏற்பாடுசெய்யும் தந்திரம் என்று கூறுகின்றனர்.

சர்க்காரோ, அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை, ரொம்பநாளாகி விட்டது போலீஸ் இலாக்காவில் மெருகு கொடுத்து, இப்போது ஜனத்தொகை வளர்ந்துவிட்டது, அதற்குத்தகுந்தபடி போலீசைத் திறமையுள்ளதாக்குகிறேம் என்று கூறுகின்றனர்.

இருக்கலாம். நோக்கம் இதுவாகவே இருக்கக்கூடும். ஆனால், காங்கிரஸ் ஒரு புதுக்கிளர்ச்சி துவக்கினால், வேறு நோக்கத்துடன் செய்வதாகக் கூறப்படும் இந்த ஏற்பாடு, புதுமுறுக்குப் பெறும் போலீஸ், கிளர்ச்சியை அடக்க உபயோகிக்கத்தான்படும். ஆகவே நோக்கத்தைவிட, விளைவு பற்றியே நாம் அதிகமாகக் கவனிக்கவேண்டும்.

இருவிஷயங்கள் தெளிவு. ஒன்று, சிம்லா மாநாடு தோற்றுவிட்டால் காங்கிரஸ், போராட்டம் துவக்கப் போவதாகக் கூறுகிறது இரண்டாவது, போலீஸ் படையினருக்குப் புதுப்பயிற்சி, புது ஆயுதம் தரப்படுகிறது. இந்த இருவிஷயங்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும்போது, சாந்தியையும் சமாதானத்தையும் விரும்புபவர்கள் சற்றுக் கலக்க மடையத்தான் செய்வார்கள்.

"பல இலட்சரூபாய்கள் பெறுமான ஆயுதங்கள், சாதனங்களுக்காக இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஏற்கனவே ஆர்டர் கொடுத்துவிட்டார்.

ஆயுதங்களை உபயோகிப்பதில் பயிற்சி அளிப்பதற்காக நபர்களைத் தருவதாக ராணுவம் கூறியுள்ளதாம். எரிகுண்டுகளை உபயோகிப்பதில் விசேஷ ஆயுதம் தரித்த போலீஸ் கோஷ்டி ஒன்றுக்குப் பயிற்சி அளிக்கப்படும்"

என்று இலட்சுமணபுரியிலிருந்து செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

பல இலட்சம் மக்கள் பஞ்சத்தால் அடிபட்டுமடிவார்கள் என்று பயப்படும் நிலைமையில், வெளிநாடுகளுக்கு ஓடி அலைந்து உணவுப் பொருளைக்கொண்டுவந்து குவிக்க வேண்டிய நேரத்தில் (சர்க்கார், ஏதோ தங்களாலானகாரியத்தைச் செய்வோமென்று) மெஷின்கன் எறிகுண்டு, இவைகளைச் சேகரிக்கிறார்கள்!!

செய்யட்டும். இதனால், பீதி அடையக்கூடிய கட்டத்தை நமது மக்கள் தாண்டிவிட்டனர். துப்பாக்கியும் தோட்டாவும் தரப்பட்டாலும், சுடுவதற்கு உபயோகமாகும் கரம், வலிவாக இருக்கக் கூடும்; உள்ளம் அவ்வளவு இரும்பாக இராது. இருந்து சுடுவதானாலும், மக்கள் இந்த நாட்களிலே பெரிய பீதியும் கொள்வதாகக் காணோம்.

ஆகவே நாம், இந்தத் தகவல்களைத் தீட்டுவது, நெருக்கடி வருமோ என்றதிகில் ஊட்ட அல்ல.

அவ்விதமானதோர் கிளர்ச்சி நடத்தக்காங்கிரஸ் தீர்மானித்தால், இதுவரை செய்துவந்த பெருந்தவறை இனியும் செய்யாதிருக்க வேண்டும் என்பதைவற்புறுத்தவே இதனை எழுதுகிறேம். முன்புசெய்த தவறு, நியாயமான முறையில்காங்கிரசின் கொள்கைகளிலேயும் காங்கிரசின் அமைப்பு முறை, நிர்வாக முறை ஆகியவற்றிலும் அபிப்பிராயபேதங் கொண்டவர்களை வரையும், அலட்சியப்படுத்தியும், எதிரிகள் என்று ஏளனம் செய்து ஒதுக்கித்தள்ளியும், அவர்களிடம் கலந்தாலோசிப்பது, கூடிக்கலந்து வேலை செய்யுமாறு அழைப்பது போன்ற பெருநோக்குடன், அரசியல் யூகத்துடன், காங்கிரஸ் நடந்துகொள்ளாததுதான்.

இன்னின்னார் காங்கிரசுக்கு மாறுபட்டவர்கள், ஆகவே இவர்களெல்லாம், பிரிட்டிஷாருக்கு நண்பர்கள், ஏனென்றால் பிரிட்டிஷார் காங்கிரசுக்கு விரோதம், என்று தவறான வாதம் புரிந்து, மிகத்தவறான முடிவுக்கு வந்தனர்.

காக்கை கருப்புநிறம்
கந்தன் கருப்புநிறம்
ஆகவே கந்தன் ஒரு காக்கை!

என்பதுபோன்ற வாதத்தில் ஈடுபட்டனர். இம்முறையும்—எந்தப் போராட்டத்தை இறுதிப்போராட்டம் என்று கூறுகின்றனரோ அந்தப்போராட்டசமயத்திலும், பழைய தவறைச் செய்யாமல் இருக்க வேண்டும்.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தகராறு; ஆதிக்கம் செலுத்துபவனுக்கும் அவதிப் படுபவனுக்கும் தகராறு. இந்தத்தகராறுக்கு ஒரு முடிவுகாண, இந்தியரின் சார்பாகப் பேசும் முழுஉரிமை தனக்கு என்று வாதாடுகிறது காங்கிரஸ். இல்லை நாங்களும் இருக்கிறேம், எங்கள் கோட்பாடுகளையும் வலியுறுத்தவேண்டும் என்று மற்றக் கட்சியினர், (நாம் உட்பட) கூறுகின்றனர்.

இந்நிலையில், சமரசம் ஏற்படாமல், கிளர்ச்சி ஆரம்பமானால், காங்கிரசின் கடமை என்ன?

இருநூறு ஆண்டுகளாக எந்த வெள்ளை ஏகாதிபத்யம், தனது பலமான பிடியிலே நம்மை எல்லாம் அழுத்திவைத்துக்கொண்டு அட்டகாசம் செய்ததோ, எந்த ஏகாதிபத்யம் ஜாலியன் வாலா செய்ததோ, எந்த ஏகாதிபத்யத்தின் இடி தாளமாட்டாமல், பகத்சிங், குமரன் போன்றவர்கள் இறந்துபட்டனரோ, எந்த ஏகாதிபத்யம் "வங்கச்சிங்கம்" தங்குமிடம் தேடி, காபூல், கந்தகார், பொலின், சிங்கப்பூர், இம்பால் என்றுபலஇடம் சென்று படை திரட்டிப்பணி புரியவேண்டிய ஆபத்தைத் தந்ததோ, அந்த ஏகாதிபத்ய ஏஜண்டுகளுடன், நடத்தும் ராஜிப்பேச்சு, சமாதான மாநாடு, ஆகியவைகளிலே, நூற்றிலேஒருபாகமவது, ஏன், கூடப்பிறந்த தோழர்களிடம் நடத்தி இருக்கக்கூடாது? வைசிராயின் மாளிகைப்படிக்கட்டை ஏறி ஏறி இறங்குவதைவிட, சொந்த நாட்டினனின் ஜாகைக்குச்சென்று வருவது, தவறு? இழிவா? இழுக்கா? ஆதிக்கம் செலுத்தி, அதன்பயனாய் அமோகமான இலாபம் அடைந்துள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு, அத்தகைய ஆசையைவிட்டுவிடு என்று கூறுவது சாத்தியம், பலிக்கும், என்று நம்புவதைவிட, கூடப்பிறந்தவர்கள், கொஞ்சம் மாறுபாடானகொள்கை கொண்டிருக்கும்போது, அவர்களுடன், பேசிப்பார்ப்போம், கலந்து ஆலோசிப்போம், சமரசம் தேடுவோம், ஒன்றுபட முயற்சிப்போம், ஒரே முகாம் அமைப்போம், என்றஎண்ணம், கடுகளவும் தோன்றாக்காரணம் என்ன? அசகாய சூரனானாலும், அலட்சியசுபாவம் கூடாதே! காங்கிரசார், பிரிட்டிஷாருடன் நடத்தும் பேச்சுமுறிந்துபோனால், நாம் ஒருகைபார்ப்போம், பிர்லா இருக்கிறார் பஜாஜ் இருக்கிறார், பணத்துக்குக் குறைவு இல்லை, பத்திரிகைகள் உள்ளன, பிரசாரத்துக்குப் பஞ்சமில்லை, யார் சேர்ந்தாலென்ன சேராவிட்டால் என்ன, என்று எண்ணிக்கொண்டு, கிளர்ச்சிதுவக்குவது, தவறு. பலகாலமாகச் செய்துவரும் தவறு.

யூகமும் நேர்மையும் உள்ளவர்கள் செய்யவேண்டியது இதுவல்ல. வெள்ளை ஏகாதிபத்யத்துடன் நடந்துவரும் சமரசம் எக்காரணத்தைக்கொண்டேனும் முறிந்துபோனால், வெறுங்கையைத்திறந்து காட்டிவிட்டு சர். கிரிப்ஸ், போய்விட்டால் காங்கிரஸ் செய்யவேண்டியவேலை, நாட்டிலே உள்ளமற்றவர்களுடன் கலந்துபேசவேண்டும்—தகராறுகளைத் தீர்க்க முயலவேண்டும்—தீர்க்கமுடியாத பிரச்னைகள் இருக்குமானால், அவைகளை ஒத்திப்போடுவதற்கு ஒருமனப்படவேண்டும். டில்லியிலும் சிம்லாவிலும் காட்டிய அன்பிலே, கொஞ்சப்பாகமாவது உடன் பிறந்தாரிடம் காட்டுவது, தேசபக்திக்கு இழுக்கல்ல, தேசபக்திக்கு அதுவே சின்னம், சிலாக்கியமான சின்னம்.

இதைச் செய்தானபிறகு, கிளர்ச்சி எப்படி இருக்கவேண்டும், முறை, அமைப்பு, நிர்வாகம், ஆகியவை எப்படி இருக்கவேண்டும், என்பதைப்பற்றிக் கலந்து பேசவேண்டும், பேசி ஓர் முடிவுக்கு வந்தால், திராவிடர்கழகம், காங்கிரஸ்காரருடன் கூடிக்களம்புகுந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புக்காகத் தன்சக்திக்கேற்ற அளவு, இரத்தம் சிந்தப்பின் வாங்காது என்று உறுதிகூறுகிறேம்.

கிழடு தட்டிய ராஜாக்களும், அசடு சொட்டும் மந்திரிகளும், ஆடி அலையும் ஜெமீன்தாரனும், கொண்டதல்ல, திராவிடர்கழகம். கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கருப்புடையுடன் காட்சி தரும் காளைகள் நிரம்பிய கட்சி! போருக்கஞ்சாப் பெரியார்; படைத்தலைவர்!!

படை இருக்கிறது, களம்புக. ஆனால், களம் எத்தகையது? போர் முறை எங்ஙனம் இருக்கும், போர் நடத்துபவர் யாராக இருப்பார், அவர் களத்திலே காளை இரத்தம் சிந்தும் நேரத்தில், வீரரின் இரத்தத்தைக் காட்டி எதிரியிடம் பேரம் பேசுபவரா, அல்லது, களத்திலே கடைசிவரை நிற்கக்கூடிய தீரரா, கிளர்ச்சிக்குப்பிறகு உண்டாகும் நிலைமையில், யாரால் எவ்வெவ்விதம் நடத்தப்படுவர் என்பது, முன்கூட்டிக்கலந்து பேசப்பட வேண்டும். ஏனெனில், அந்தக் காளைகளுக்கு கண்ணும் கருத்தும் சற்றுத் தெளிவாகவே இருக்கிறது, வீணுக்கு உழைக்க, விழலுக்கு நீர்பாய்ச்ச, உழைத்து உலுத்தரைவாழவைக்க, சூதரின் சூத்திரக்கயிற்றை ஏற்றுக் கொள்ள மறுக்கும். மேலும், எந்த நியாயத்தின்படி பார்த்தாலும், போர் நோக்கம், போர் முறை, போருக்குப்பிறகு ஏற்படக்கூடிய புது அமைப்பு எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டிக் கலந்துபேசி ஒரு நல்ல முடிவுக்கு வராமல், களத்திலே தாவக்கூடிய வீரன், வீணனாவான். திராவிட இனம், பலகாலமாக வீணுக்கு உழைத்து உழைத்தே நலிந்துபோயி

விளம்பரம்

வடாற்காடு திருப்பத்தூர் முனிசிப்பாலிட்டிக்கு பல்ப், மீட்டர், வயர் ஆகிய எலக்ட்ரிக் சாமான்கள் சப்ளை செய்யக்கூடியவர்கள், தங்கள் டெண்டரைக் கீழ்க்காணும் விலாசத்திற்கு 20-5-46க்குள் அனுப்பிவைக்கவும். தேவைப்படுகிற எலக்ட்ரிக் சாமான்களின் லிஸ்ட், திருப்பத்தூர் முனிசிபல் எலக்ட்ரிக் எஞ்சினியரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

2—5—46
முனிசிப்ல் ஆபீஸ்,
திருப்பத்தூர், N. A.

E. V. சோமசுந்தரம், B.A.,
P. & P. A, (Dip)
முனிசிபல் கமிஷனர்,
திருப்பத்தூர் N. A.

ருக்கிறது. எனவேதான், காங்கிரசைக்கேட்கிறது, போர் நோக்கம், முறை, அமைப்பு, நிர்வாகம், பின்விளைவு, புது அமைப்பு இவைஎப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே பேசத்தயாரா? என்று.

தயாரானால், தலைவர்கள் கூடட்டும், திட்டம் தீட்டட்டும்; திராவிடவீரர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தயாரிக்கக்கூடிய சிறுகுண்டு, எறிகுண்டு, ஆகியவற்றுக்கு, மார்பிலே இடந்தரச்சித்தமாக உள்ளனர்.

காங்கிரசார், இந்த நேரியமுறையைக்கையாளாமல், திராவிடர் கழகத்தைக் கலந்தாலோசிக்காமல், தாமாக ஒருதிட்டம் தீட்டிக் கிளர்ச்சி துவக்கினால், அதனுடைய வெற்றிதோல்வியின் பூராப்பொறுப்பும் அவர்களுடையதேயாகும்; திராவிடரை, நிந்திக்க அதிகாரம் இல்லை. எனவே, திராவிடர் கழகம், போராட்டத்திலே பங்கு கேட்கிறது, தான்பங்கெடுத்துக்கொள்ள இசையும் போர், எப்படி இருக்கும், எம்முறையில் நடத்தப்படும் என்பதைக்கேட்டுத் தெரிந்துகொண்டபிறகு.

ஒரே 'ஜமா'வான, இசைக்கோஷ்டியில்கூட, ஒவ்வோர்தடவைகூடும் போதும், இசைவாணன் "இத்தனை கட்டை சுருதி" என்று பக்கவாத்தியக்காரரிடம், கூறுவதையும், கோஷ்டியினர், தங்களுக்குள்கலந்துபேசியே பிறகுகச்சேரிதுவக்குவதையும் காணலாம்! ஏன்? இசை இனிமையுடன் இருக்க, இந்தக் கூட்டுப் பேச்சு இன்றியமையாதது. இசை விஷயமாகவே, இது தேவை என்றால், நாட்டு விடுதலைக் கிளர்ச்சிக்கான விஷயத்தில், மெஷின்கன் இருக்கிறது, எரிகுண்டு இருக்கிறது என்று பேசப்படும் நேரத்தில் நாம், ஒன்றுகூடிக்கலந்து பேசியே, கிளர்ச்சிதுவக்கவேண்டுமென்பது, எவ்வளவு அவசியம் என்பதைத் தோழர்கள் யோசிக்க வேண்டுகிறேன். இந்தயோசனையும் முறையும், பழையகாங்கிரஸ்பெரிய தலைகளுக்குப்புரியாது, பிடிக்காது, அதனாலேயே நாட்டுவிடுதலைக்கான காரியம் இதுவரை கெட்டு வருகிறது. காங்கிரசில் உள்ள வாலிபர்கள், இந்தயோசனையை வற்புறுத்த வேண்டும், தங்கள் தலைவர்களிடம் ஒருநாட்டு விடுதலைப்போரை நடத்தும் தகுதியானமுறை இதுதான் என்பதை வலியுறுத்தவேண்டும். செய்வார்களா? காங்கிரசிலேஉள்ள வாலிபர்கள் இந்தப் புது ஏற்பாடு, தங்களால் உண்டாக்கப்பட்டது என்ற பெருமை அடையலாம்என்பது அல்ல நாம் கூறுவது; நாட்டு விடுதலைப்போர்வெற்றிபெறவேண்டும்; இன்னமும் எவ்வளவு காலத்துக்குத்தான் நீடிக்கவிடுவது இந்த வெட்கக்கேடான நிலைமையை; வெள்ளையன் நமக்கு புத்திகூறிக்கொண்டு, பீடத்தில் கொலு வீற்றிருக்கும் நிலைமையை. நம் நாட்களிலாவது இந்த நிலைமை ஒழியவேண்டாமா? அதற்காகவே இதைச் சொன்னேன். யோசியுங்கள்.

"சுக்லாம் பரதரம்..............!"

சென்னை சட்டசபையின் முதல் கூட்டம் 25–5–46ல் நடைபெறும். அன்று கொண்டுவரப்பட இருக்கும் முதல்மசோதா, 'மந்திரிமார்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டும்" என்பதாகும்.

500ரூபாய் வாங்கும் மந்திரிகள் என்று "அகிலப்புகழும்" பெயரெடுத்த காங்கிரஸ் மந்திரிகள், இனி 1500ரூபாய் சம்பளம் பெறுவர்.

★ இராம இராச்சியம் ★

(கைவல்யம்)

மகாத்மாகாந்தி அவர்கள் இராம இராச்சியம் என்கிறார். இராஜ கோபாலாச்சாரியாரும் இராமாயணத்தைப் பாராயணம் செய்வேன் என்கிறார். வடதேசத்துப்பனியா ஒருவர், தென் தேசத்து ஐயங்கார் ஒருவர், இரண்டுபேர்களின் கருத்தில் வித்தியாசமில்லை. இரண்டுபேர்களும் பெரியவர்களே. வைணவ சமயகர்த்தாக்களைவிட இவர்களைப் பெரியவர்கள் என்றுசொல்லச், சமயம் இடம்கொடுக்காது. சமயப் பெரியார்கள் செய்த தீங்கே மலை போல் கிடக்கிறது. சமய அபிமானமும் ஜாதி அபிமானமும் சந்நியாசியையும் விடாது. இராமரோ தன் சக்தியை அடக்கிக்கொண்டு தெய்வலோகத்தில் இருக்கும் தெய்வமல்ல. தன்சக்தியையும் கருத்தையும் நம்நாட்டிற்குக் காட்ட வந்த தெய்வம். பலதைக் காட்டினதாகவும் பக்தர்கள் சொல்லுகிறார்கள். இராம சக்தியைச் சிறிதாவது காட்டும்படியாகச் செய்தால் தானே அவர்கள் சொல்வது உண்மை என்று நம்பலாம். நமக்கு இப்பொழுதுள்ளகஷ்டத்தைவிடப் பெரிய கஷ்டமுண்டா? இப்பொழுதுஉபயோகப்படாதஇராமரும்; இராம பாணமும், அனுமாரும் இனிஎப்போது உபயோகப்படப் போகிறார்கள்? ஒரு பாணத்தில் நெல்லோ அரிசியோ உண்டாக்க முடியாதா? கொண்டுவாராதா! மலையைத் தூக்கும் அனுமாருக்கு இருபது முப்பதுடன் பாரமா? பாணத்தைத் தொடுத்து வருணனை வரவழைத்துக் காலாகாலத்தில் மழை பெய்யச்செய்யக்கூடாதா? நாம் தெய்வத்தை நம்பவேண்டுமென்று தானே எல்லா உபதேசங்களும் செய்யப்பட்டன, செய்யப்படுகின்றன. நம்பி நம்பித்தான் ஆதாரமில்லாமல் ஒரு கோடி போசாதுர்படியான நிலைவந்திருக்கிறது. பிச்சை எடுத்து ஏகதேசம் வந்து அரை வயிறு கால் வயிறு உண்டு, ஏகதேசம் பிழைத்துக்கொண்டால் இராம மந்திரமே மந்திரம் அவர் கருணையே கருணை என்று சொல்ல இராமாயணத்தை ஏந்தி வந்துவிடுவார்கள், "முன் யுகத்தில்தான் தெய்வசக்தி இருந்தது இது கலியுகம் ஜனங்கள் ஒழுக்கம் தவறி நடக்கிறார்கள், ஆனதால் தெய்வம் சக்தியைக் காட்டாது" என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தக்கலியுகத்தில் ஒழுக்கவீனர்களான மக்கள் மத்தியில் அந்தத் தெய்வத்திற்கு வேலைஎன்ன? வைகுந்தத்தில் விஷ்ணுசெய்த அக்கிரமத்திற்குச் சாபம்பெற்று இராமன்என்ற மனிதனாகப்பிறந்தார் என்கிற புராணங்களை இராமாயணத்தை நம்புகிறவர்கள் நம்பவேண்டாம். இல்லையேல் விஷ்ணுவும் இராமரும் பொய்யாய் விடுவார்கள். உழைப்பவன் சோற்றை உழைக்காதவனுக்கு வாங்கிக்கொடுக்கும் இராமருடைய வேலை இங்கே இனி வேண்டாம். பூலோகத்திலும் அக்கிரமத்திற்கு இராமர் சாபம்பெற்றால் போக்கிடமில்லை. ஆனதால் வந்த வேலையோ தீர்ந்தது. கலியுகத்தில் இராமரால் ஒரு வேலையும் செய்ய முடியாதென்று பக்தர்களே சொல்லுகிறார்கள். வைகுந்தமேபோய்ச்சேர்ந்துவிட்டும். ஆகாமியமில்லாத இடத்தில் வேலையில்லாதவர்கள் இருப்பது குற்றம்.

• வாசகர்களே! மூன் ஜாக்கிரதையினால் ஆழ்ந்த கருத்தைக்கொண்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளப் பிராமணர்கள் நம்மவர்கள் மூலமாகத்தங்கள் கொள்கைகளை நமது நாட்டில் காவியமூலமாகப்பரப்பினார்கள். இராமாயணம் எழுதினதும் இராமர் உண்டானதும் பிராமணர்களுக்கு மற்ற ஜாதியார்கள் அறிவுகெட்டு அடிமையாய் இருப்பதற்கேயாகும். அதற்காக எழுதப்பட்டிருக்கும்இரண்டு கதைகளைக் கீழே எழுதுகிறேன். அந்தக் கதைகள் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அது செய்த அக்கிரமமும் கொடுமையும் எவ்வளவு என்பதைத் தெரிந்துகொள்ளவே எழுதுகிறேன்.

ஒரு பிராமணப்பையன் செத்துவிட்டான். பிராமணர்கள் இராமரிடம்போய் "இராமா! உன்னுடைய இராச்சியத்தில் பெரும்அக்கிரமம் நடந்துவிட்டது. சம்புகன் என்கிற சூத்திரன் தவம் செய்கிறான். அதனால் எங்கள் பையன் செத்துவிட்டான்" என்றார்கள். உடனே இராமர் தவம் செய்யும் சம்புகனிடம்போய் அவன் தலையை வெட்டினார். உடனே பிராமணப் பையன் உயிர்பெற்று எழுந்தான். தேவர்கள் பூமாரிபொழிந்தார்கள். பிராமணர்கள் ஆசீர்வாதம் செய்தார்கள் என்று இராமாயணம் சொல்கிறது.

தவசுஎன்றால் தெய்வத்தைநினைப்பது. ஒருஜாதியான் தவம்செய்தால் இன்னொரு ஜாதியான் சாவதும், தவம் செய்தவனின் தலையை வெட்டினால் செத்தவன்பிழைப்பதுமான நியாயம் சாதாரணமான அறிவுக்குக்கூட ஒத்துவராது. பெரும்அறிவுக்குக்கூடப் புலனாகாது. இராமாயணம் அர்த்தமற்றதாக எவ்வளவு பிரபலப்படுத்துகிறார்களோ அவை களுக்கு இந்த நீதியைப்பொருத்திப்பார்த்தால் இராமனுடையதெய்வத்தன்மையைத் தென்னாட்டில் விளக்கினது எதற்காக என்பது தெரியும். செத்தவனைப் பிழைக்கச் செய்வதுதெய்வத்தால்முடியலாம். தெய்வத்தை அடையத்தவம் செய்கிறவனின் தலையை வெட்டுவது எந்தத்தெய்வநீதி. சாதாரண நீதியில் கூடப்படாத இந்த நியாயம் விஷ்ணுவின்நேர் அவதாரமாய் உலகத்தில் நடந்துகாட்ட வந்ததென்று சொல்லப்படும் இராம அவதாரத்தின் இராம இராச்சிய நீதியைப் பார்த்தீர்களா? புலி, காடி இராச்சியத்தில் — இந்தநீதி இருக்குமா? சூத்திரனை சம்புகன் தலையை இராமரே வெட்டினார் என்பதால் பார்ப்பானுக்கு எல்லாரும் கீழ்ப்பட்டுப்பணிவிடை செய்யவேண்டுமென்றும், சூத்திரன் பார்ப்பான் மூலமாகவே தெய்வத்தையோ பரலோகத்தையோ நினைக்க வேண்டுமென்றும், இல்லையேல் தலை வெட்டப்படும் என்றும் சட்டம் இராம இராச்சியத்தில் ஏற்பட்டுவிட்டது என்பதுதான் தீர்மானம். சம்புகன் கதையை இராமாயணத்தில் எழுதி, இராமரே நடந்து காட்டினார் என்று புகழ்ந்து, பற்ற இராசாக்களுக்கும் கற்பித்து, அந்தபடை இராஜாக்களால் எத்தனை தலைகள் வெட்டப்பட்டிருக்கும். தலைபோய்விடுமே என்கிற பயத்தால் பார்ப்பனர் ஏவல் தவிர வேறே நல்லவழியில் மனதைச் செலுத்தப்பயந்து அவர்கள்சொற்படிகேட்டு நடப்பதே நமதுஆன்றி என்று நினைத்துக்கிடந்தது நம்நாடு. ஆங்கிலேய இராச்சியம்வந்துசிறிது படிப்பும் அறிவும் வந்தும்கூட நம்மவர்க்கு அந்தப்பயம் இனியும்போகவில்லை.

சம்புகன் கதை இராமாயண உத்தரகாண்டத்தில் ஒருமூலையில்இருக்கிறது. கவி இன்பமும் காவிய இரசமும் அதிலென்னஇருக்கிறது. அதை யார்படிக்கிறார்கள், இடைச்செருகலாக இருக்கலாம் கம்பனும் வால்மீகியும் அதைப்பாடுவார்களா? என்றெல்லாம் பெரிய ஆராய்ச்சிப்பண்டிதர்கள் வீட்டுக்குள்ளிருந்துபேசலாம். வெளியே வந்துபேசமுடியாது. சம்புகன் கதையை ஆதாரமாகக்கொண்டு அதையே நிலைபெறச்செய்ய நாலாயிரப் பிரபந்தத்தில் ஆழ்வாரும் வடகலைக்கு ஆச்சாரியான வேதாந்ததேசிகரும் எடுத்து ஆண்ட இராமஸ்துதிகளும் இருக்கின்றன.

"செறி தவச்சம்புகன் றன்னைச்
சென்று கொன்று,
செழுமறையோ னுயிர்மீட்டுத்
தவத்தோனீந்த
நிறை மணிப்பூணணியுங்கொண்ட—
இராமா"

என்று குலசேகராழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழியில் காணக்கிடக்கிறது. இவர்சேர நாட்டின் அரசர். பனிரண்டுஆழ்வார்களில் ஒருவரானதால்வைணவ ஆச்சாரிகளுக்குமுன்பே இவர்காலம். இராமாயணத்தில் இராமர் இராவணனிடம் சண்டைக்குப்போயிருக்கிறார் என்று படிக்கக்கேட்டவுடன் மந்திரிகள் தடுத்தும் தன் சைனியத்துடன் இலங்கைபோகச் சமுத்திரம்வரை போய்த் திரும்பி வந்துவிட்டார். அவர் செய்த இராம கைங்கரியப் பெருமையை அவர் சரித்திரமே கூறும். இராமாயணத்தை முழுமனதுடன் நம்பி ஆண்ட இத்தகைய அரசர்கள் காலத்தில் சம்புகன் போன்றவரின் தலைகள் எத்தனை வெட்டப்பட்டிருக்கும் என்பதை ஆலோசித்துப் பாருங்கள். சிவாஜி நாற்பதுபண்டிதர்களையும், அவர்கள் குடும்பத்தையும் அழித்தான் என்று ஞான சூரியன் சொல்லுகிறது. திருமலை நாயக்கர் காலத்திலும் வேதப் பொருள் கேட்ட சூத்திரனைக்கழுவில்போட்டார்கள். அவைகளெல்லாம் இராமஇராச்சியத்தில்முளைத்தவைகளே.

வடகலையை உண்டுபண்ணினவர் வேதாந்த தேசிகர். இவர் பாதுகாசாஸ்திரம் என்று இராமருடைய பாதக் குறடைப்பற்றி ஆயிரம் பாட்டுகள் ஸ்துதியாகப் பாடி இருக்கிறார். அதில் "ஏ பாதுகையே! இராமருடைய இராச்சியத்தில் சூத்திரன் தவஞ்செய்யப் பிராமணப்பிள்ளை செத்தது என்கிற ஒரு அக்கிரமம் நடந்திருக்கிறது. அதுகூட உன்இராச்சியத்தில் நடக்கவில்லை எல்லாச் சூத்திரர்களும்

(அடுத்த பக்கம் பார்க்க)

தாது புஷ்டிக்கு

மஹா வீரிய லேகியம், அயக்காந்தத் தங்க செந்தூரம்

30 வேளை: ரூபா 10—0—0

இணையற்ற மருந்துகள் என்றநர்சாட்சிகள்குவிகின்றன. வெளியில் சொல்ல நாணப்பட்டு ஒழித்துவைத்திருக்கும் கிழத்[illegible]மையை நீக்கி நரம்புகளை முறுக்கேற்றிவிடும். சரீரம் பௌவன [illegible] தேசசுடன் பிரகாசிக்கும்.

சரஸ்வதி வைத்திய சாலை,
பழனி (S. I.)

இராம இராச்சியம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

எங்களுக்கு அடிமைசெய்துகொண்டிருந்தார்கள். நாங்கள்இல்லாமல் கடவுள் அடிசேரவேண்டுமென்று அவர்கள் நினைக்கவேயில்லை" என்னும் நீதி பாதுகை இராச்சியபாரம் நடத்தின பதினைந்து வருடமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பெருமானுக்குச் சமமான ஆழ்வாருக்கும் வைணவ ஆச்சாரிக்கும் சம்புகன் கதை வெகு திருப்தி. அந்தநாளிலிருந்து ஆங்கிலேயநாள் வரையிலும் அநேக தலைகள் வெட்டுண்டு போயின. தலை போனதேயன்றி தாழ்மை போகவில்லை.

சம்புகன் கதைவரலாறு.

புத்தர் காலத்திற்குப்பின் இராமாயணம் எழுதினதென்று தெரிந்தோம். துக்கம், துக்கஉற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரண மார்க்கம் என்கிற நான்கு படிகள் புத்தர்களுக்கு. துக்கத்திற்குக் காரணம் ஆசை. ஆசைக்குக் காரணம் மனது, சங்கற்ப சேர்க்கை. மனச்சங்கற்பம் குறைந்தால் மனமில்லை. மனமில்லாவிட்டால் ஆசையில்லை. ஆசையில்லையேல் துக்கமில்லை என்பது புத்தர்கொள்கை. அதற்காகத் தியானம் செய்வார்கள் புத்தர்கள். அதற்குத் தவசு என்று பெயர். சங்கற்பத்தைக் குறைக்க விசாரணை வேண்டுமென்று வேதாந்தி சொல்லுவதும், புத்தம் சொல்லும் தியானமும் ஒன்றுதான். இரண்டுக்கும் தவசு என்றுதான் பெயர். பிராமணமதம் க்ஷீணித்துப் போனதை முன்னுக்குக் கொண்டுவர ஒரு க்ஷத்திரிய இராசனை மகாவிஷ்ணுவின் அவதாரமான இராமன் என்றுகற்பித்து அதற்கு வேண்டியதெல்லாம் செய்து இராமாயணம் எழுதினார்கள். பிராமணன் தவிர மற்றஜாதிக்காரர்கள்தெய்வவழிபாடும்மோட்ச சொர்க்கம்புகும் ஏற்பாடும்வேண்டுமானால் பிராமணன் மூலமாகவே செய்து கொள்ளவேண்டுமென்பது பிராமணமத சித்தாந்தம். இல்லையேல் தண்டனை. இதுதான் ஸ்மிருதிகளில் இருக்கின்றன. புத்தமதம் பரவினஉடன் அவ்வேற்பாடு சீர்குலைந்து விட்டது. அநேகர் புத்த ஏற்பாட்டின்படி தியானம் என்ற தவசுக்குப் போய்விட்டார்கள். அதைத்தடுப்பதற்குப் பிராமணர்கள் சேர்ந்து ஆலோசித்து ஒரு பிராமணப்பையனைப் படுக்கவைத்துச் செத்துப் போனதாகப் பொய் ஏற்பாடு செய்து இராமனிடம் போய் "சூத்திரன் தவசுசெய்கிறான், அதனால் எங்கள் பையன் செத்து விட்டான்" என்றார்கள். இராமர் சூத்திரனான சம்புகன் தலையை வெட்டினார். பிராமணப் பையன் பிழைத்துக் கொண்டான் என்றார்கள். இதுமாதிரிப் புரட்டுக்கள் பல நடந்திருக்கின்றன.

பெத்தான் சாம்பனுக்கு முத்தி கொடுப்பது முறை என்று சிவபெருமான் உமாபதிதீட்சதருக்குச் சீட்டு எழுதிக்கொடுத்ததாகச் சொல்லிப் பெத்தான் சாம்பானை நெருப்பிலிட்டுக்கொன்றதும், நந்தனை நெருப்பில் பொசுக்கிப்பின் பிராமணனாக வந்தான் என்றதும் புரட்டேயாகும். அவைகளை இனியும் நம்பும்படித்தசைவர்கள் இல்லையா? பிராமணனின்புரட்டை நம்பும் படிப்புத்தான் அவர்கள் படிப்பு. அவர்களைத்தான் படித்தவர்கள் என்று சொல்வது வழக்கம். புரட்டை நம்பும் படிப்பும், நம்பாவிட்டால் இராச தண்டனையும், சந்தேகப்பட்டுக்கேட்டால் பிராமணக் கொடுமையும் நிறைந்து அதுவே தெய்வ சக்தியாகவும் இருந்தது. அந்தக் காலத்துத் தொடர்பால் இந்தக்காலத்தில் நடந்தஒன்றைச்சொல்லுகிறேன். அதிலிருந்து எல்லாம் தெரிந்துகொள்ளுங்கள்.

சிறு கிராமங்கள் சிலவற்றில் அதிகாரம் செலுத்திக்கொண்டிருந்தார் ஒரு பிரபு. அவர் ஊருக்குப்பக்கம் ஒரு கோயில். அந்தக் கோயில் அவருக்குச் சொந்தம். அங்கே ஐந்தாறு பார்ப்பனர்கள் வீடு. அவற்றுள் ஒரு பத்து வயதுப் பார்ப்பனப் பெண் இறந்துவிட்டது. அங்கிருந்த பிராமணர்கள் இரண்டுநாள் பொறுத்துப் பிரபுவிடம் வந்து பக்கத்தூரிலிருக்கும் வைத்தியன் மாந்திரீகம் செய்து எங்கள் குழந்தையைக் கொன்றுவிட்டான் என்றார்கள். அவன் யார், எந்த ஊர், என்ன பேர் என்று கேட்டார்களேயல்லாமல் மாந்திரீகம் செய்வது எப்படி? செய்தால் குழந்தை எப்படிச் சாகும்? என்கிற ஆலோசனையே உண்டாகவில்லை, அதைப்பற்றிப் பேசவுமில்லை. முன்பட்ட அடி, உதைகள் ஆலோசனை செய்வதை அழித்துவிட்டன. மீறிக்கேட்கலாமென்றாலோ பார்ப்பனர் முகம் முன்னால் பிரபுவின் முகம் பின்னால். எந்த விவகாரத்தின் தீர்ப்புக்கும், முடிவுக்கும் அடி எடுத்துக்கொடுப்பதும், கூட்டுவதும், பிரிப்பதும் ஒட்டுவதும், அழுத்துவதும், உண்டாக்குவதுமான வேலையில் பார்ப்பனர்கள்தான் முதன்மையானவர்கள். பார்ப்பாருக்கும் அவ்வைத்தியனுக்கும் விரோதம். ஆகவே பல்லைப் பிடுங்கிவிட்டால் மந்திரம் பலிக்காதென்ற முடிவுக்குவந்து பிரபுவை வைத்தியன் பல்லைப்பிடுங்க உத்தரவிடச் செய்தார்கள். அப்படியே வைத்தியனைக் கொண்டுவந்து கட்டிப்போட்டுப் பல்லைப்பிடுங்கிவிட்டார்கள். வலிபொறுக்க மாட்டாமல் வைத்தியன் செத்தான். போலிஸ் அஸிஸ்டண்ட் சூப்பிரண்ட், சப்கலெக்டர் இவர்களுடைய அதிகார எல்லைக்குள் இருப்பது அந்தக்கிராமம். இந்து அதிகாரிகளாக இருந்தால் ஆகம தந்திரசாஸ்திரத்தில் மாரணம் சொல்லப்பட்டிருக்கிறதென்று செத்தவன் பேரில் கவலையில்லாமல் இருந்திருப்பார்கள். அந்த இரண்டு அதிகாரிகளும் ஆங்கிலேயர்கள். அதனால் கேஸ் வந்தது. சிறிது காலம் பிரபு வாரண்டுக்கு ஒளிந்து கொண்டிருந்தார். பின் பணச்செலவு, சாட்சிமாற்றம் முதலியவற்றால் தப்பினார். இப்படி அநேகம் நடந்திருக்கிறது. தெரிந்தது கொஞ்சம், தெரியாதது அநேகம். பல தெய்வங்களும், அவைகளுக்காக உண்டாக்கப்பட்ட அநேக சாஸ்திரங்களும், பார்ப்பனர்களுக்கே கைஆயுதங்களாக இருக்கின்றன. பார்ப்பனர்கள் சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார்கள். அவர்கள் பழியை ஏற்றுக்கொள்ளத் தெய்வங்களிருக்கின்றன. நியாயம் சொல்லச் சாஸ்திரங்களிருக்கின்றன. துன்பங்களை ஏற்றுக்கொள்ள நாம்இருக்கிறோம். கவி இன்பமும், காவிய இரசமும் கண்டு களிக்கப் பண்டிதர்களிருக்கிறார்கள்.

★

பாரதிதாசன் நிதி

10—5—46 வரை கவிஞர் நிதிக்குச் சேர்ந்துள்ள தொகை:—

ரூ. 12,901-10-0

சென்றகிழமை, பாரதிதாசன் நிதிக்காகத், "திராவிட நாடு" காரியாலயத்திற்குப் பணம் அனுப்பியவர்களின் விபரம் கீழே தரப்படுகிறது:—

தோழர் டி. என். இராமன் மூலம் 'சினிமா உலகம்' ஆசிரியர் பி. எஸ். செட்டியார் ரூபா 10. தியாகராய நகர் டி. எ. சாமி ரூபா 5. சென்னை கி. இராமச்சந்திரன் ரூபா 25. பூனா மாதவன் மூலம் ரூபா 7. சென்னை 'கலைமகள்' ஆசிரியர் செகந்நாதன் ரூபா 20. ஈரோடு கே. பாலையா ரூபா 5. சேலம் ர. தங்கவேல் ரூபா 1. விழுப்புரம் லோ. சம்பந்தன் ரூபா 5. பூனா ஆர். அரங்கநாதன் ரூபா 2–8–0 சுந்தரம் ரூபா 2. கண்ணபிரான் ரூபா 1. சின்னப்பன் ரூபா 1. சின்னையா ரூபா 1. மாலசாமி ரூபா 1. முனிசாமி ரூபா 1. சைமன் ரூபா 1. இராதா கிருஷ்ணன் ரூபா 1. ஜோசப் ரூபா 1. மேத்து அணா 8. சாவணன் அணா 8. ரூபன் அணா 8. சாவணன் அணா 8, நூபன் அணா 8, குஞ்சு அணா 8. பழனிசாமி அணா 4. கண்ணன் அணா 4. நாகைமணி பகுத்தறிவு நிலையத்தார் ரூபா 10. பொன்மலை எம் நாராயணசாமி ரூபா 5. இராசிபுரம் எ இரத்தினசபாபதிப்பிள்ளை ரூ.5 சென்னை ஜி. முத்துச்சாமிப்பிள்ளை ரூ1. மதுரை கே கே முத்துச்சாமி ரூபா 1. தஞ்சை டி கே கந்தசாமி ரூபா 1. முசிரி தாலுக்கா கொளக்குடி கிராமம் என். இராமராசுரெட்டியார் ரூபா 25. எல். வி. சாம்பசதாசிவ ரெட்டியார் ரூபா10. கே. சண்முகசுந்தரம் ரூபா 5. எஸ் என். நல்லப்பரெட்டியார் ரூபா 10. கே-என். இராமசாமிரெட்டியார்ரூபா 5. பி. ஆர். நாராயணசாமி ரூபா 10. ப. அ. இராமசாமிரெட்டியார் ரூபா 3. கே. பாபுரெட்டியார் ரூபா 5. கே. நடராசரெட்டியார் ரூபா 10 பி. என். கிருஷ்ணசாமிரெட்டியார் ரூபா 10. எம். என். கிருஷ்ணசாமிரெட்டியார் ரூபா 3. சி. துரைசாமிரெட்டியார் ரூபா 5. கே. மருதநாயகம் ரூபா 3 பி. கே. துரைசாமி ரூபா 2 சி ந. வெங்கட்ராமரெட்டியார் ரூபா 10. பா. நல்லப்பரெட்டியார் ரூபா 2. ந. கிருஷ்ணசாமிரெட்டியார் ரூபா 1. சி. பெத்துரெட்டியார் ரூபா 2 கே. எம். பெரியசாமிபிள்ளை ரூபா 3. மு. சதாசிவம்பிள்ளை ரூபா 1. எம். சண்முகம் ரூபா 1. பி. என் செம்பரரெட்டியார் ரூபா 3. என். நல்லப்பரெட்டியார் ரூ. 1. எ. கோபாலகிருஷ்ணன் ரூபா 1. ந. இலக்குமணரெட்டியார் ரூபா 1. பி. கிருஷ்ணசாமிரெட்டியார் ரூபா 1. வி. வெங்கட்ராமரெட்டியார் ரூபா 2. சி. வெங்கடாசல நாயடு ரூபா 1 ஆர். நல்லுசாமி ரூபா 1. எ. வெங்கடாசலம் ரூபா 1. பி. சுப்பிரமண்யஆசாரி ரூபா 2. தா.பிச்சுப்பிள்ளை ரூபா 1. எஸ். சாரதாம்பாள் ரூபா 1. வி நல்லப்பரெட்டியார் ரூபா 2. வி. இராமசாமிரெட்டியார் ரூபா 2. மு. க. பாபுரெட்டியார் ரூ 1. கி. வி. நல்லப்பரெட்டியார் ரூ 1. தொட்டியம் டி எஸ். மாணிக்கம் ரூ 1. சாளப்பட்டி மணிமாரமுத்துராசா ரூ 2. அம்மாவாசி முத்துராசா ரூபா 2. வீரமலை முத்துராசா ரூ 2. அப்பணநல்லூர் என். துரைசாமிபிள்ளை ரூ 1. அ. ஆறுமுகம் ரூ 2. ஆர்.சிவாலிங்கம் ரூ 1. ந. இராமசாமிரெட்டி ரூ 3. சேருகுடி பி, எம். இராமசாமிபிள்ளை ரூ 1. வேளைக்கா நத்தம் சுந்தரராசு ரெட்டியார் ரூ 3. கொளுஞ்சிப்பட்டி எ. கோவிந்தராசு ரூ 2. வாகூர் ஆர். அருணசலரெட்டியார் ரூ 1. சீனிவாசரெட்டியார் ரூ 2.

முக்கிய அறிவிப்பு

நமது பத்திரிகைக்காகக்கொடுக்கப்பட்டுவந்த பேப்பர் கோட்டாவின் அளவு, பேப்பர் நெருக்கடிகாரணமாக, மே மாதத்திலிருந்துசர்க்காரால்குறைக்கப்பட்டுவிட்டது. இதனால், பாக்கி வைத்திருக்கும் ஏஜண்டுத் தோழர்களுக்கும் சந்தாதார்களுக்கும் பத்திரிகை அனுப்புவதை அறவே நிறுத்தியாவது, பணம் கட்டும் சந்தாதார்களுக்கும் ஏஜண்டுகளுக்கும் மட்டுமே தேவையான அளவுஇதழ்கள் அனுப்பக்கூடிய முறையைக் கையாளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால் பாக்கி உள்ள தோழர்கள் தங்கள் பாக்கிகளை உடன் அனுப்பிவைத்தாலன்றி, மேற்கொண்டு பத்திரிகையைத் தொடர்ந்து அனுப்பமுடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

★

செல்லப்பிள்ளை

3-ம் பக்கத் தொடர்ச்சி

வே: என்னைச்சொன்னானே, அந்தப்பெண்ணு இவன்கிட்டத் தக்குவாளான்னு, அவன் பெண்ஜாதி நடத்தையைக் காட்டுகிறேன் வா.

(வேலைக்காரக் குப்பன். கோபத்தோடு, சீமானின் நண்பனின் கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு, வேகமாகச் செல்கிறான், சீமான் வீட்டுப் பின்புறம் உள்ள மோட்டார் ஷெட்டுக்கு.

'ஷெட்டு' கதவு, முழுவதும் மூடப்படவில்லை; கொஞ்சம் திறந்திருக்கிறது. கதவோரமாக நிற்கிறார்கள் இருவரும். உள்ளிருந்து பேசும் குரல் வருகிறது)

பெண்: எனக்குத் துளிகூட நிம்மதி இல்லை, மோகன்! நான் சொல்வதைக் கேள், நாம் பேசாமல் வெளியே போய்விடுவோம்.

ஆண்: உனக்குப் பைத்யம்........

பெண்: முன்னால் அவனோடு இருக்க முடியாது இனிமேல்.

ஆண்: என்ன, உனக்கு இப்போது கஷ்டம்?

பெண்: விளையாடாதே. எனக்கு ஏற்றவனா அவன்?

(வளை ஒலி: முத்தமிடும் சத்தம்: பெருமூச்சு: இலேசான சிரிப்பு: மீண்டும் வளை ஒலி: மெல்லிய குரலில் பாட்டு: மோட்டார் ஊதுகுழல் மெல்லிய நாதமாக்கப்படுகிறது)

(சீமானின் நண்பன், வேலையாளின் வாயைத் தன் கைகளால் பொத்தியபடி, அங்கிருந்து இழுத்துக்கொண்டு போகிறான்.)

(கொஞ்சதூரம்சென்றதும்,வேலையாள், ஆவேசம்பிடித்தவன்போலக் கூச்சலிட்டு..............)

வே: என் மனைவியை என் எதிரிலே இழிவாகப் பேசினானே, எப்படி இருக்கிறது அவன் தர்மபத்னியின் வேலை; பார்த்தாயா?

ந: பார்த்தேன்; என்னசெய்வது?

வே: இப்படிப்பட்ட உலகைப் பற்றி நீ படிக்கும் புத்தகத்திலே ஒருவரி கூடவா இல்லை?

ந: ஏராளமாக இருக்கிறது........... படித்ததை எல்லாம் சொல்லப் போனால்..................

வே: சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளையாக இருக்கமுடியாது!

(நண்பன், வெட்கத்தால் தலை குனிந்து கொள்கிறான். வேலையாள், கோபமாகப் போய்விடுகிறான்)

கும்பகோணத்தில்

18, 19-5-46 இரண்டு நாட்களிலும்

தஞ்சை மாவட்ட

திராவிட மாநாடும், சுயமரியாதை மாநாடும்,

"சந்திரோதயம்" "சிவாஜி" நாடகங்களும் நடைபெறும்.

அனைவரும் வருக.

★ மந்திரிசபை ஜாதகம் ★

"கல்கி" கணித்தது

★

இப்போது, சென்னையில் அமைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மந்திரிசபை, எப்படி இருக்கும், என்ன பயன் அதனால் ஏற்படும் என்பது பற்றி நாம், ஏதும் கூற விரும்பவில்லை. செயலைக் கவனித்து அதற்குத் தக்கபடி நமது விருப்பு, வெறுப்பைக் காட்டுவது என்ற தீர்மானத்திலிருக்கிறோம். ஆனால், மந்திரிசபை எப்படி இருக்கும், என்று "கல்கி"ப் பத்திரிகை ஒரு ஜாதகம் கணித்தது ஏப்ரல் 21-ல்; அதை நாட்டுமக்களுக்குக்காட்டுகிறோம். ஆச்சாரியாரைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று, காங்கிரஸ் 'மேலிடமும்' காந்தியாரும், பிரயத்தனப்பட்டனர். 'சிபார்சு' அனுப்பினர். அதனைச் சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சியினர் நிராகரித்துவிட்டனர். தோழர் பிரகாசம், தேர்ந்தெடுக்கப்பட்டு, அவரும் மந்திரிசபையை அமைத்துவிட்டார்.

'மேலிடத்தின்' சிபார்சின்படி நடந்துகொள்ளவேண்டும், ஆச்சாரியாரையே தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும், என்று "கல்கி" ஏப்ரல் 21-ல் எழுதிய தலையங்கத்தில், சென்னை சட்டசபைக் காங்கிரஸ் கட்சியினர் வேறுவிதமாக முடிவு செய்தால் — ஆச்சாரியாரற்ற மந்திரிசபை அமைத்தால்— அந்த மந்திரிசபை, எப்படி இருக்கும், அந்தச் சம்பவத்தால் என்ன நேரிடும் என்பதை, உருக்கத்துடனும் (!) எச்சரிக்கை (!!) யுடனும் எழுதியிருக்கிறது.

"கல்கி" கணித்த அந்த ஜாதகத்தை இப்போது நாம் வெளியிடுவதற்குக்காரணம், கல்கியின் மிரட்டலையும் மேலிடத்து சிபார்சையும் சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, சட்டை செய்யாமல், ஆச்சாரியாரை வெளியேபோகச் சொல்லிவிட்டு, ஆந்திரகேசரி, பிரகாசம் பந்துலுவைத் தலைவராக்கிவிட்டது- அவரும் மந்திரிசபை அமைத்துவிட்டார். அவ்விதமான நிலைமை ஏற்பட்டால், — ஆச்சாரியாரற்ற மந்திரிசபை அமைக்கப்பட்டால்— எப்படி இருக்கும் என்று 'கல்கி' கணித்த ஜாதகத்தை, இப்போது கவனிப்பது அவசியமாகிறது.

மூன்றுமிடத்தில் ராகு உட்கார்ந்துகொண்டு, ஏழாமிடத்தில் சனி இருக்க, அதன்மீது பார்வைசெலுத்துவதால், இந்த ஜாதகனுக்கு, ……………………" என்று ஜோதிடக்காரன் கூறுவதுபோலவே 'கல்கி' கூறுகிறது;

> "அகில இந்தியத் தலைவர்களின் புத்திமதியைப் புறக்கணித்துவிட்டு, அவர்களுடைய விருப்பத்துக்குவிரோதமாகச் சென்னைக் காங்கிரஸ் பிரதிநிதிகள் நடந்து கொள்வார்களானல், அதன் பலன் என்னவாகும்?

1. அம்மாதிரிஏற்படுத்தும் காங்கிரஸ் மந்திரிசபைக்கு நாட்டில் செல்வாக்குச் சிறிதும் இராது.

2. அத்தகையமந்திரிசபையிடம் சர்க்கார் அதிகாரிகளுக்குமதிப்பும் மரியாதையும் இராது.

3. நிர்வாகம் சீர்குலைந்து போகும்.

4. லஞ்சம் தலைவிரித்தாடும்.

5. நாட்டைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும் பஞ்ச நிலைமையில் எல்லாவிதமான கேடுகளும் உண்டாகும்.

6. அத்தகைய மந்திரிசபை மூன்று மாதங்கூட நிலைத்திராது.

7. வெகு சீக்கிரத்தில் சின்னாபின்னமாகிச் சிதறிப்போய்விடும்.

8. காங்கிரஸ் மாபெருந் தலைவர்களின் புத்திமதியைப் புறக்கணித்தால் இன்னும் மேலும் மேலும், இந்தத் துரதிர்ஷ்டமாகாணம், அவமானங்களுக்கு உள்ளாக நேரிடும்.

ஆகவே, 'கல்கி'யின்ஜாதகப்படி, மந்திரிசபை, நாட்டுக்கு அபாயத்தையும் அவமானத்தையும் தேடித்தந்து, அதிகாரிகளால் அலட்சியப்படுத்தப்பட்டு, லஞ்சம் தலைவிரித்தாடும் நிலைமையை உண்டாக்கி, சீர்குலைந்து, சின்னபின்னமாகிச் சீக்கிரமே சாகும், என்று ஆகிறது.

"ஜாதகம்" கணித்தது, நாமல்ல, "கல்கி". அதன் ஜாதகக் குறிப்பின்படி, சென்னையில் இப்போது ஏற்பட்டுள்ளது

அற்பாயுசு மந்திரிசபை

அதன் ஆயுட்காலம் 90 நாள். ஆகவே, "கல்கி"யில் இல்லாவிட்டாலும், அதன் ஆபீசில், அங்கே இல்லாவிட்டாலும், மனதில்,

அற்பாயுசு மந்திரிசபை

இன்று 10-ம் நாள்

இன்னும் எத்தனை நாள்?

என்றுபொறிக்கப்பட்டிருக்கும்.

நமக்கென்ன அதெல்லாம், பெரிய இடத்து விஷயம்! பெரியவா சமாசாரம்! பூசுரலோக மான்மியம்!! நடக்கட்டும்! பார்ப்போம்!

மந்திரி கனம் கே. பாஷ்யம் அவர்கள், இத்தகைய ஜாதகங்களை நம்ப வேண்டாம் என்று, கூறுகிறார். நமக்கு ஆரூடத்திலே நம்பிக்கை கிடையாது; இப்போது அமைக்கப்பட்டுள்ள மந்திரிசபை வீழ்ந்துவிடவேண்டும் என்றபொச்சரிப்பு எண்ணமும்கிடையாது. நாம் விரும்புவதெல்லாம், இந்த மந்திரிசபை, மக்களின் நன்மைக்கான காரியங்களைச் செய்யவேண்டும், வெறும்கட்சிப் பிரதாபம், கட்சிமாச்சரியம் ஆகியவைகளைக் காட்டக் கூடிய விளம்பரச்செயலிலே ஈடுபடாமல் மக்களின் நலனையே குறிக்கோளாகக்கொண்டு பணிபுரிய வேண்டும் என்பதுதான்.

ஆச்சாரியாருக்குக் கிரீடம் கிடைக்கவில்லையே என்ற எரிச்சலில், 'கல்கி'யின் உள்ளம் எந்த அளவுக்கு மட்டரகத்தை நோக்கிச் செல்கிறது என்பதை எடுத்துக் காட்டவே, 'கல்கி' கணித்த ஜாதகத்தை வெளியிட்டோம்.

திருமணம்

நெல்லை அம்பா சமுத்திரம் ஞா. குசைப்புலவர் அவர்கட்கும் ஷையூர் திருமதி பாப்பா என்ற அந்தோனியம்மாளுக்கும் 17—3—46ல் பம்பாய்தாராவி பு.இ. வாடி இல்லத்தில் எஸ். செல்லையா புலவர் அவர்களின் தீவிர முயற்சியால் சீர்திருத்த மறுமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஷை மணத்தின் ஞாபகார்த்தமாக "திராவிடநாடுக்கு" 1, ரூ. நன்கொடை யளிக்கப்பட்டது.

சென்னை நுங்கம்பாக்கம் எஸ். பா… சுந்தரம் மகன் சரவணபெருமாளுக்கும் காஞ்சிபுரம் பொன்னுசாமிமகள் திருமகளுக்கும் மணமகன் இல்லத்தில்வாழ்க்கை ஒப்பந்தம் 17—4—46ல் நடைபெற்றது. இதன்நினைவாகத் திராவிடநாடுக்கு 2 ரூ தரப்பட்டது.

பாளையங்கோட்டை திராவிட கழ… தோழர் மாடசாமி அவர்களின் சகோதரர் ஆறுமுகம்-முத்தம்மாள் வாழ்க்கை ஒப்பந்தம் 11—4—46ல் தலைவர் எ. … முத்தையா அவர்கள் தலைமையில் எவ்விதசடங்குமின்றி நடைபெற்றது. இதன் நினைவாக 'திராவிடநாடு,' 'குடிஅரசு' ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே 1 ரூ. வீதம் அன்பளிப்பு அளிக்கப்பெற்றது.

குடந்தைத் தோழர் எ. இராமய்ய… தனம், ஆகியவர்களின் வாழ்க்கை ஒப்பந்தம் 30—3—46ல் தோழர் V. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் நடந்தது. நினைவாகத் 'திராவிடநாடு' வளர்ச்சிக்கு 1 ரூபாய் தரப்பட்டது.

நன்கொடை

போர்முனைத் தோழர்கள் டி.வி.எஸ். மணியமும், ரா. இக்னேஷியஸும் 'திராவிடநாடு' வளர்ச்சிக்கு ரூபாய் 2 தந்துள்ளனர்.

தந்தி:- "புருமார்க்" திருச்சி.

ரங்கோன் ராதா

2-ம் பக்கத் தொடர்ச்சி

விபசாரியாகிவிட்டேன் என்பது தெரிந்தால், உன்னை உலகம் கேவலமாகப்பேசும். அதைக்காண நான் சகிக்கமாட்டேன், ஆகவே, என்னால் எங்கே உனக்கு அவமானம் நேரிட்டுவிடுகிறதோ என்று அஞ்சாதே. நான், இருபது வருஷங்களாக இரவுபகலாக உன்னை எண்ணி எண்ணி ஏங்கியிருக்கிறேன். நீ தத்திநடந்ததை, கொஞ்சிப் பேசியதை, ஓடி ஆடியதை, நான்பார்க்கவில்லை. மகனே! உன்பெயர் என்னடா? நான் உன்னை அழகேசா! என்றே அழைத்து வந்தேன், ஒரு வருஷகாலம்; உன்னை வளர்க்கும் பாக்கியம்இருந்தவரையில்." என்று ரங்கம்மாள் கூறினபோது, நான் கோவெனக்கதறியே விட்டேன். "அம்மா! என்பெயர் நாகசுந்தரம்! எவ்வளவு விசித்திரமான நிலைமையம்மா இது. தாயார், தன்மகனின் பெயரை, மகனையே கூறும்படி கேட்பது" என்று சொல்லி அழுதேன்.

"அழவேண்டியவள் நானடா நாகு! நீ ஏனடா ராஜா! அழவேண்டும்? உனக்குஎன்னடா, கண்ணே, குறை. நான்பாவி, துஷ்டை, உன்னை என்மகனென்று ஊரார்முன்கூறிக் கொள்ள முடியாத கேவல நிலை அடைந்தேன். உனக்கு ஏன் கவலை? நான் செத்துவிட்டவள் செத்து விட்டவளேதான்—அப்படியே நினைத்துக்கொள். உன்கனவில் ஒரு நாள் நான் தோன்றி, மகனே! என்னை மன்னித்துவிடு! உன்னைத் தவிக்கவிட்டுச்சென்ற தாயை மன்னித்துவிடு, என்று கெஞ்சினேன் என்று நினைத்துக்கொள்" என்றார்கள்.

"அம்மா! அப்படிஎல்லாம்பேசாதீர்கள். எனக்குஉண்மை வேண்டும், விவரம்வேண்டும், விளக்கம் வேண்டும், என் வேதனையைப் போக்கவேண்டும்" என்று கேட்டேன். "நாகு! நான்இனிக்கூறப் போவது அவ்வளவும் சத்தியமான பேச்சு. இன்றுகேவலமானநிலையை அடைந்திருக்கிறேன் என்ற காரணத்தால், என்வார்த்தையைச் சந்தேகிக்காதே. நான்உன்தாயார். அதைக்கூறிக்கொண்டு, நான் மறுபடியும் அந்தஸ்தானத்தை அடைய முடியாது. உன்னையார் என்று தெரிந்துகொண்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி, மட்டற்றது என்றபோதிலும், மருட்சியுடன் கூடியது தான். உன்னைநான், "என்மகனே" என்று மனதிற்குள்ளாகத்தான் சொல்லி ஆனந்தப்பட முடியுமே தவிர, வெளியேசொல்லமுடியாது. எந்தமகனும் பொறுத்துக்கொள்ள முடியாத இழிவான காரியத்தில் நான் இறங்கினேன்—அப்பா, நாகு! நீபுத்திசாலி, கருணைஉள்ளவன். என் கதைமுழுவதையும்கேட்டால், இழிவான நிலைமைக்கு நானாகப்போகவில்லை, உன் அப்பாவேதான் தள்ளினார் என்பதைத் தெரிந்து கொள்வாய். இவ்வளவுகூறுவதும், என்னை மன்னித்துவிடு, மாதாஎன்று ஏற்றுக்கொள்என்று உன்னைக்கேட்க அல்ல. நீயாகஒருவேளை அவ்விதமான எண்ணம் கொண்டால்கூட நான், திட்டமாகமறுத்துவிடுவேன். கேள், என் பரிதாபத்துக்குரிய கதையை! உன்தாய், விபசாரியான கதையை."

"இருபது ஆண்டுகளுக்குமுன்பு, ஒருவெள்ளிக்கிழமை கோட்டையூர் மக்களெல்லாம்குமுறினார்கள்; "மகராஜி! புண்யவதி! போய்விட்டாள். பச்சைக்குழந்தையைவிட்டு விட்டுப்போய் விட்டாள்!" என்று கூறினர். அன்றுதான்நான் இறந்து விட்டேன்! வெள்ளிக்கிழமையன்று, பூவோடும் மஞ்சள்குங்குமத்தோடும் புண்யவதி போகிறாள் பார், பாவம், குழந்தைதான்பிழைக்குமோ என்னமோ தெரியவில்லை என்று, மயான ஊர்வலத்தைக் கண்டு மக்கள் பேசிக்கொண்டனர். உன் அப்பா, முக்காடிட்டுக் கொண்டு சென்றார், உன்தாத்தா வேளாள சங்கத்தலைவர் வீரராகவ முதலியார், தடியை ஊன்றிக் கொண்டு தள்ளாடி நடந்து சென்றார். இரவுமணி பத்தாகிவிட்டது, பிணத்துக்குத்தீயிட! தீவெகுவேகமாகப்பிடித்துக் கொண்டது.

(தொடரும்)

தேவை

இலங்கை பூராவும், திராவிடநாடு, குடிஅரசு, உதயசூரியன், குமரி, ஆகிய பத்திரிகைகளை, வினியோகம் செய்யப் பொறுப்பும், நாணயமும், முன்பணம்கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மொத்த ஏஜன்ஸி கொடுக்கப்படும். விபரத்திற்கு

குடிஅரசு ஸ்டோர்
130, முகாந்திரம்ரோடு
கொள்ளுப்பட்டி கொழும்பு

இந்தியா, "பாலைவனம்" ஆகிறது!

பஞ்சம் தலைவிரித்தாடும்காலம் இது. நீர்வள நிலவளம் நிரம்பிய நாட்டிலே, ஏன் இந்த நிலைமை? நாட்டு வளப்பம் நாசமாகும்படிவிடப்பட்டதுதான். உழைக்க ஏற்றவிதமான வளமும் கெட்டு வருகிறது வறண்ட நிலங்கள்! வளம் சுருங்கிவிட்டது! காரணம், கவனிப்புக் குறைவுதான். இந்தியா, பாலைவனம் ஆகிவருகிறது என்று ஒரு அதிகாரி காரணங்காட்டிக் கூறுகிறர். அவர் கூறுவதாவது:—

"நம் கண்ணெதிரிலேயே இந்தியா வற்றி வறண்டு போய்க்கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் எத்தனை பேருக்கு இந்த விஷயம் தெரியும்?" என்று கேட்கிருர். பஞ்சாபின் பிரசித்திபெற்ற ஐ ஸி. எஸ். அதிகாரியான கர்னல் எல். எல் ப்ரேய்ன் இவர் கிராமப் புனருத்தாரணத்தில் பெரிதும் அக்கரை கொண்டவர்.

"வட இந்தியாவில் ஒருமலைப்பிரதேசமான ஜில்லாவைப் பற்றிப் பிரமாதமாய்ப் புகழ்ந்துகூறினுர் என் நண்பரொருவர். ஆனல் உண்மையென்னவென்ருல் அந்த ஜில்லா வருஷா வருஷம் தன் வளமையை இழந்து வந்திருக்கிறது மரங்களும் புல் பூண்டுகளும் குறைந்துகொண்டே வந்திருக்கின்றன; மக்களுக்கும் வயிருர உணவு கிடைக்கவில்லை. இன்னெரு நண்பரோ, இந்தியாவின் ஒரு பாகத்தில் பிரயாணம் செய்கையில், ஆஹா, சந்திரமண்டலத்திலே மலைகளிருப்பதாய்ச் சொல்கிருர்களே, அவைகள் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வியந்துகொண்டார். எனக்கும் சில வருஷங்களுக்கு முன்தான் கண் திறந்தது அதற்கப்புறம், காற்றும் மழையும் அரித்து அடித்துக்கொண்டு போனதும் இந்த வளமையைப் பற்றி நிபுணர்கள் உதவிகொண்டுஆராய்ந்தேன். மண்ணும், வளமும், தாவர வர்க்கங்களும் மறைந்துவரும் வேகத்தைக்கண்டு நான் திடுக்கிட்டுப்போனேன் இந்த விஷயத்தில் வடக்கு, தெற்கு எல்லாம் ஒன்ருய்த்தானிருக்கின்றன. சில இடங்களில் கண்ணுக்குக் குளிர்ச்சியான கானகங்களைக் காண்கிறேம். மெய்தான். ஆனல் இன்னும் எவ்வளவோசெழுமையாய் இருக்கக்கூடுமே, அதை யோசித்துப் பாருங்கள்.

கடவுள் மொட்டைக் குன்றுகளைச் சிருஷ்டிக்கவில்லை. மரங்களாலும், புதர்களாலும் அவைகளை அலங்கரித்துத்தான் வைத்திருந்தார். அவற்றின்பசுமையான ஆடையைப் பறித்தவன் மனிதன்தான். காற்றும் மழையும் வளமான மண்ணையெல்லாம் வாரிக்கொண்டு போகும்படி விட்டதற்கு அவனுடைய அஜாக்கிரதைதான் காரணம். இப்படி, இழந்ததை மீண்டும் பெறுவதற்கு எத்தனை யுகம் ஆகுமோ. குன்றுகள், மேய்ச்சல் தரைகள், வயல்கள் எல்லாந்தான் இப்படி அரிக்கப்பட்டுவருகின்றன. பல இடங்களில் மழை குறைந்து வருகிறது; பூமிக்கடியிலுள்ள நீரும் ஒதுங்கிக்கொண்டே போகிறது. மழைக்கும் பயிர்பச்சைகளுக்கும் சம்பந்தம்இருக்கத்தான் செய்கிறது. மரங்கள்இல்லாததனுல்தான் மழை குறைகிறதென்று நம்மால் நிரூபிக்க முடியாதென்ருலும் மேகங்கள் தளிர்ச்சியான காட்டில் பெய்வதைப் போல் வறண்ட பாலைவனங்களில் பெய்வது கஷ்டம் என்பதைச்சொல்லவேண்டியதில்லை.

பாலைவனங்கள் மனிதனின் சிருஷ்டியாய்த்தானிருக்கவேண்டும்; காற்றுக்கன ...த்தில் தன் காரியத்தை நடத்தக் கூடிய அளவுக்குப் பரந்தபிரதேசங்களில் மரங்களை அழித்துவிட்டால், அப்புறம் இ... ...ச் சக்திகள் கட்டற்று வேலை ... பாலைவனத்தைப் பெருக்கிக் கொண்டே போய்விடும். அமெரிக்காவிலுள்ள மணல் திட்டுக்களே இதற்குப் போதிய உதாரணமாகும்.

அஜாக்கிரதை இன்னுமெப்படி இந்தியாவை வாளவைத்துப் பாலைவனங்களை உண்டாக்கி வருகிறதென்று பார்ப்போம். இந்தியாவில் சாதாரணமாய், சிறிதுகாலம் கடுமையான மழை அடித்துத்தள்ளுகிறது; ஆனல் நீண்ட காலம் ஒரே வறட்சியாயிருக்கிறது. இந்த வறட்சி ...த்தில் நிலம் காய்ந்து பொடிப் பொடியாய்ப்போகிறது. ஆகவே, கனத்த மழைபெய்யும்போதுமட்டமாக்கப்படாத நிலத்திலிருந்தெல்லாம் தண்ணீர் மண்ணை அடித்துக்கொண்டு போய்விடுகிறது. பயிர்பச்சைகள் பாய் விரித்தது போல் நிலையாய்ப் படர்ந்திருந்தால் இப்படி நேராது. பயிரிடும் நிலத்தில் சிறிது ...த்திற்குத்தான் பயிர்கள் அடர்த்தியாயிருக்கமுடியும். ஆகவே, உயரமாய்ச் சரிவாய் இருக்கும் நிலத்தையெல்லாம், ... ஆரம்பிக்குமுன் மட்டமாக்க வேண்டும். இந்தியாவில் பயிரிடும் நிலம் எவ்வளவோ இப்படி மட்டமாக்கப்படாமல் கிடக்கிறது. இதனுல் நாளுக்கு நாள் வளம் பெறுவதற்குப் பதிலாக இந்த நிலங்கள் வளம் இழந்துவருகின்றன. ஆகவே இந்தியாவில் பயிர்த்தொழில் விஷயமாய் முதலில் செய்யவேண்டியது இதுதான். சரிவான நிலங்களையெல்லாம் மட்ட தளங்களாக அமைக்கவேண்டும். அவசியமான இடங்களில் மிச்சமான தண்ணீரை வெளியேற்ற வடிகால்களும் அமைக்கவேண்டும், இந்தியாவில் சிலபிரதேசங்களில் இதை நன்குணர்ந்திருக்கிருர்கள். ஆனல் பெரும்பாலான இடங்களில் இதில்லாமல் நிலம் க்ஷீணித்துக்கொண்டே வருகிறது.

குன்றுகளிலும் பல் தரைகளிலும் புல் வளருங்காலம் சொற்பமானதுதான். ஆகவே, ஆடுமாடுகள் மேயவிடுவதைக் கண்டிப்பாய்க் கட்டுப்படுத்தினலொழிய, பயிர் பச்சைகள் அழிந்தொழிந்து போகும். இதனுல் நிலம் கட்டாந்தரையாய்ப்போகும். மேயும் பிராணிகளும் நிலத்தை மிதித்து, காற்றும் மழையும் அடித்துக்கொண்டு போவதற்கு அனுகூலம் செய்துவிடுகின்றன. இப்படித்தான் இந்தியாசுரண்டப்பட்டுவருகிறது.

குன்றுகளுக்கும் மேய்ச்சல் தரைக்கும் அருகில் கொட்டில்களில் ஆடுமாடுகளைக் கட்டிப்போட்டு அறுத்த புல்லையும் ஜீவனப்பயிர்களையும் போட்டால் சீக்கிரத்தில் மரங்கள் முளைப்பதுடன் புல்லும் ஏராளமாய் வளரும். கட்டிப்போட்ட ஆடுமாடுகள் மேய்ந்து திரிபவைகளைக் காட்டிலும் அதிகமாய்ப் பால் கொடுக்கும். மக்களும் சரியான உணவையே அவைகளுக்குக் கொடுத்துவரலாம்.

சரிவான இடங்களில் நிலத்தை மட்டம் மட்டமாய் அமைத்துப் பயிரிடுவதனுல் உடனே விளைவு அதிகமாகிறது. இப்படிச் செய்வதின்மூலம் நிலத்தின் ஈரம் அதிகரிப்பதுடன் மேல் மண்ணும் நிலத்தை வளப்படுத்தும் உப்புக்களும் மழையில் அடித்துக்கொண்டு போகாமல் நிலத்திலேயே தங்குகின்றன. ஒவ்வொரு வருஷமும்எத்தனையோகோடி டன்மேல் மண் அடித்துக்கொண்டு போகப்படுகிறது. இதெல்லாம் திரும்பிவரப்போவதில்லை. ஒருமழையில் அடித்துக்கொண்டு போகப்படும் மேல்மண் மீண்டும் சேருவது நூறுவருஷங்கூடஆகலாம். ஆகவே, இந்தப்பிரச்சினையை எவ்வளவு சீக்கிரம் நாம் கவனிக்கிறேமோ அவ்வளவு சீக்கிரமாக இந்தியாவில் நிலத்தின் வளம் பெருகி உணவுக்கஷ்டத்தைத் தீர்க்கும்.

இந்தியாவில் எதிர்காலம் அரசியல்வாதிகள் கையிலில்லை; இந்தியாவின் கணக்கற்ற கால்நடைகளின், ஆடுமாடுகளின் குளம்பிலும் பல்லிலுந்தான்கிடக்கிறது. அவைகளை நாம் கட்டுப்படுத்தாவிட்டால் இந்தியாவற்றிவறண்டுபோய்க்கொண்டேதானிருக்கும்; கடைசியில் நாமெல்லாம்மாண்டு மடிந்துபோவோம்; இந்தியா மற்ருெரு சஹாராவாகவோ, கோபியாகவோ ஆய்விடும் — அவ்வளவுதான்."

★

ஆச்சாரியார் வீழ்ச்சி

●

அன்பர் ராஜகோபாலாச்சாரியாரின், வீழ்ச்சி, தென்னுட்டுச் சரிதத்தில்ஒருமறக்கமுடியாத சம்பவம். அவருடைய வீழ்ச்சிக்குக் காரணங்கள் பலப்பல கூறப்பட்டன. அவருடைய சக்தியையோ, செல்வாக்கையோ யாரும் குறைத்து மதிப்பிடவில்லை. மேலிடத்துச் சிபார்சு அவருக்கு அமோகம். இருந்தும், அவர் நிராகரிக்கப்பட்டார். இந்த வீழ்ச்சிக்கான பலகாரணங்களைப்பலர் கூறினர். திருச்சி, 'சிவாஜி' பத்திரிகை, இதுசம்பந்தமாக ஏப்ரல் 28-ந்தேதி, ஒரு ருசிகரமான காரணத்தைக் காட்டியிருக்கிறது. அது, இது:—

"திரு. சி. ஆர். சென்ற 30 வருஷகாலமாகத்தென்னுட்டுக் காங்கிரஸ் தலைமைப் பதவியை தாங்கிவருகிருர். அவருக்கு அடுத்தபடியாக லாயக்குடையவர்களாக வர அவர் யாரையும் விடவில்லை. காலஞ்சென்றசத்தியமூர்த்திகூடத்திரு.சி. ஆருக்குப் பிடிக்காது. திரு. சி. ஆர். தான் மகாகெட்டிக்காரர், புத்திசாலி, அவரைவிட்டால் வேறுஆள் கிடையாது என்று எல்லோரும் சொல்லும்படி பெயரெடுக்க வேண்டுமென்றுகாரியங்களைச்செய்தவர் திரு. சி. ஆர். ஜெர்மன் ஹிட்லர்கூட தன்வார்சு யார் என்றுஉலகத்துக்குச் சொன்னுர். நம் நாட்டு மகாத்மா காந்திகூட தன்வார்சு பண்டிதநேரு என்று பிரகடனம் செய்த விஷயம் உங்களுக்கெல்லாம் தெரியுமென்று நினைக்கிறேன். இப்படி ஒவ்வொரு மாகாணத்திலும் படிப்படியாகத் தலைவர் பதவிக்குவேண்டிய யோக்கியதாம்சத்துடன் ஆட்கள் இருந்துதான் வருகிருர்கள். தென்னுட்டில் மட்டும் தலைவர் பஞ்சம் ஏற்படுவானேன்?

திரு. சி ஆர். தான் இன்றைய தலைவர் பஞ்சத்திற்குக் காரணமென்ருல் வாசகர்களாகிய நீங்கள் யாரும் மறுத்துவிட முடியாது. தனக்குப்பிறகு தன் பொறுப்பை ஏற்கும்படியான ஆளைத் தயார்செய்ய அவர் விரும்பாமலிருந்தார். தான் செய்யும் எந்தக்காரியத்தையும் மற்றவர்கள் செய்து முடித்துவிடுவதை அவர் சகிக்கமாட்டார். எதுசெய்தாலும் தன்னுல் ஆனதாக இருக்க வேண்டும். இந்தமாதிரி அவரிடமிருக்கும் ஒரு தனரக குணமே தமிழ்நாட்டுக்குத்தலைவர் பஞ்சத்தை ஏற்படுத்தக் காரணமாயிருந்தது. திரு சி.ஆர். மீண்டும் பிரதமராகியிருந்தால் சாதகபாதகங்கள் எத்தனையிருந்தாலும் ஒரு விஷயத்தில் மட்டும்பயங்கரமுட்டுக்கட்டை ஏற்பட்டிருக்கும். அதாவது அவர் அதிகாரத்திலிருக்கும் காலவரையில் வேறு மற்றெவரையும் தலைமைப் பதவிக்கு லாயக்குடையவராக வந்துவிடாமல் பார்த்துக்கொண்டிருந்திருப்பார். இந்த ஒரு காரணத்தை முன்னிட்டாவது திரு. சி. ஆர். வராமையால் தமிழ் நாட்டிற்கு நன்மை ஏற்படலாமென்று நம்புகிறேன். ஏதோசிலகாலம் கஷ்டப்படவேண்டியிருப்பினும், தலைவர்கள் ஏற்பட வழியுண்டு என்பதில் மகிழ்ச்சி கொள்வோம்."

ஆறுதல் கூறுகிறேம்

தேவைப்பட்டாலும், நிராகரிக்கப்பட்டாலும், நமது கடமையை நாம் செய்துவிட வேண்டுமே என்பதற்காக 'தினசரி' இதழுக்குநாம் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேம். மந்திரிசபை அமைக்கும் முயற்சியிலே தோழர்பிரகாசம்ஈடுபட்டு இருகையில், 'தினசரி' சில யோசனைகள்கூறி, அதன்மூலம்தன் 'ஆசை' யையும் வெளிப்படுத்திற்று. 'நேத்தாஜி' சர்க்காரில் வேலைபார்த்தவர்களில் சிலரையாவது, மந்திரி சபையிலே சேர்த்துக்கொள்ள வேண்டும், என்று யோசனைகூறி, யாரோடாக்டர் அழகப்பாவாம் (தர்மப்பிரபுஇருக்கிருரே, அவர் அல்ல!) அவர்நேத்தாஜி சர்க்காரிலே வேலை பார்த்தவராம், அதற்கு முன்னல் இங்கேயே இந்திய சர்க்காரிலே, வைத்திய இலாக்காவிலே வேலை பார்த்தவராம், அவரைச் சுகாதார மந்திரியாக நியமிக்க வேண்டும், அதுபெருமைக்கும், மகிழ்ச்சிக்கும் உரியசெயலாகும் என்று தினசரி எழுதிற்று. பதின்மூன்றுபேரில், தினசரி அறிமுகப் படுத்தியவரைக் காணேம். யோசனை நிராகரிக்கப்பட்டதனுல், ஆசை நிறைவேருததால், 'தினசரி' வருத்தமடைந்திருக்கக்கூடும். ஆகவேதான், "வருந்த வேண்டாம்" என்று, நாம், தினசரிக்கு ஆறுதல் கூறுகிறேம்.

மணமகள் தேவை

பாண்டிய நாட்டவரொருவருக்குச் சாதி, மதம்கருதாதமணமகள் தேவை. வயது 20க்குள்ளிருக்க வேண்டும். சுமார் 8ம்வகுப்புக்கல்வியறிவுள்ளவர் கீழ்க்காணும் முகவரிக்கு எழுதினல் தெரிந்துகொள்ளலாம். மணமகனுக்கு வயது 26.

K. S. Krishnasamy, Clerk.
(38 G. R.) Demob SN.
3, Q. A. O. Grc.
Dehradun (U. P.)

●

முடிவு செய்தனர்

ஜூன் 27ந்தேதிவேலைநிறுத்தம்செய்வதென்றும், 1ந்தேதி நோட்டீஸ் தருவதென்றும் ரயில்வேத் தொழிலாளர்கள் முடிவுசெய்துள்ளனர். மத்யஸ்தம் ஏற்படுத்த முயற்சி நடக்கிறது.

கிளி மார்க்
பட்டணம் பொடி.
நிறம் காரம் மணத்தில் நிகரற்றது
இன்றே உங்கள் தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள்.
எ.எஸ்.ராஜன் அண்டு கம்பெனி,
தபால்பெட்டி நெ. 1155.
பழையவண்ணாரப்பேட்டை, சென்னை.

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.